# மனித வள மேலாண்மைத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2023 – 2024

### மானியக் கோரிக்கை எண் – 35


## முனைவர். பழனிவேல் தியாக ராஜன்
**நிதி மற்றும் மனித வள**
**மேலாண்மைத் துறை அமைச்சர்.**



**©**



**தமிழ்நாடு அரசு**

**2023**

## பொருளடக்கம்


| வ. எண். | பொருள் | பக்க எண். |
| --- | --- | --- |
| 1. | முன்னுரை | 1 |
| 2. | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் | 10 |
| 3. | தமிழ்நாடு தகவல் ஆணையம் | 21 |
| 4. | மாநில விழிப்புப் பணி ஆணையம் | 27 |
| 5. | ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம் | 29 |
| 6. | ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம் | 35 |
| 7. | தமிழ்நாடு லோக் ஆயுக்தா | 38 |
| 8. | ஆய்வுப் பிரிவு | 41 |
| 9. | பயிற்சி | 46 |
| 10. | புதிய முயற்சிகள் | 77 |
| 11. | முடிவுரை | 78 |

| | |
|---|---|
| 12. | <u>**பிற்சேர்க்கை**</u><br><br>**வரைபடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தெரிவு விவரங்கள்** |

# மனித வள மேலாண்மைத் துறை

# 2023-2024 - ஆம் ஆண்டிற்கான

# கொள்கை விளக்கக் குறிப்பு

## 1. முன்னுரை

*"அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்*
*திறந்தெரிந்து தேறப் படும்".*

*(குறள் 501 – தெரிந்து வினையாடல்)*

*(அறவழியில் உறுதியானவனாகவும், பொருள் வகையில் நாணயமானவனாகவும், இன்பம் தேடி மயங்காதவனாகவும், தன்னுயிருக்கு அஞ்சாதவனாகவும் இருப்பவனையே ஆய்ந்தறிந்து ஒரு பணிக்கு அமர்த்த வேண்டும்)*

1(1) அரசுப் பணியாளர்களின் நிர்வாகத்திற்கென சிறப்பு கவனம் செலுத்த வேண்டி, 1973 ஆம் ஆண்டு மாநில நிருவாக சீர்திருத்த ஆணையத்தின் முக்கிய பரிந்துரைகளில் ஒன்றாக, பொதுத் துறையிலிருந்து ஒரு புதிய ஒருங்கிணைந்த துறையாக, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை 1976 ஆம் ஆண்டு

உருவாக்கப்பட்டது. அவ்வாறு உருவாக்கப்பட்ட துறையில் இரண்டு அலகுகள் முறையே பணியாளர் அலகு மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் (ம) பயிற்சி அலகு என்று துவக்கத்தில் செயல்பட்டு வந்தது. இந்த இரண்டு அலகுகளும் வெவ்வேறு செயலாளர்களின் கட்டுப்பாட்டில் இருவேறு துறைகளாக இயங்கி வந்தன.

அரசுப் பணியாளர்களின் சேவையின் தரத்தை உயர்த்துவதற்காக, அவர்களுடைய பணி மற்றும் பயிற்சிகள் தொடர்பான நிருவாக அமைப்புகளை வலுப்படுத்துவதும், பராமரிப்பதும் முக்கிய பணிகளாக உள்ளன. அதன் காரணமாக, இத்துறையின் பணியமைப்பினை செம்மைப்படுத்துவதற்காக, தனித்தனியே இருவேறு துறைகளாக செயலாற்றி வந்த நிலையை மாற்றி, இரு துறைகளையும் இணைத்து, ஒரே துறையாக, அதாவது, மனித வள மேலாண்மைத் துறை என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அதற்கேற்றவாறு, அரசுத் துறைகளின் தேவைகேற்ப பணியாளர்களின் எண்ணிக்கையை முன்கூட்டியே கணித்தலும் மற்றும் மனித வளம் தொடர்புடைய வழிகாட்டு நெறிமுறைகள், விதிகள், நடைமுறைகளை பின்பற்றுதலும், அவற்றை தொடர்ச்சியாக கண்காணிப்பதும் இத்துறையின் முதன்மைப் பணியாக உள்ளது. பொது மக்களுக்காக

ஆற்றும் சேவையை பொறுப்புடனும், அவர்களின் தேவைகளை முன்னரே அறிந்து செயல்படும் நோக்குடனும், அரசின் சேவைகளை அவர்கள் எளிதில் பெறுவதற்குரிய பணிகளை செவ்வனே ஆற்றும் அரசுப் பணியாளர்களை ஊக்கப்படுத்துவதும் பாராட்டுவதும் மனிதவளத்தை மேம்படுத்தும் கொள்கையின் ஒரு பகுதியாகும்.

அரசுப் பணிக்கான உரிய நபர்களை தேர்ந்தெடுத்தலும், பயிற்சி அளித்தலும், ஒழுங்குபடுத்துதலும், அவர்களுக்கு உரிய பதவி உயர்வுகளை வழங்குதலும் மனிதவள மேலாண்மைத் துறையின் உன்னதப் பணிகளாகும்.

பொது மக்களுக்கான சேவையை மேம்படுத்துதலில், சிறந்த முன்முயற்சிகள் குறித்த விவரங்களை மாநிலம் முழுவதும் பரவ செய்தல் இத்துறையின் தலையாய கடமையாகும். அத்தகைய முயற்சிகளை மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு உரிய அங்கீகாரம் மற்றும் பரிசு அளிக்கப்படுகிறது. இவ்வாறு புதிய முயற்சிகளின் விவரங்கள் பகிரப்படுவதன் மற்றொரு பயனாக பிற அலுவலர்களின் சேவைத் திறனும் அனுபவ பகிர்வு மூலம் மேம்படுகிறது.

அரசு பணியாளர்களின் திறன் மேம்பாடு என்பது பொது மக்களுக்கான சேவையின் தரத்தை உயர்த்தும் உயரிய நோக்கத்தினை உள்ளடக்கியது. இதனடிப்படையிலான இத்துறையின் குறிக்கோள் பின்வருமாறு :–

"மகத்தான மனித வளம்

அதன்மூலம் மக்கள் நலம்"

<u>1(2) இத்துறை மேற்கொள்ளும் செயல்பாடுகள் பின்வருமாறு:</u>

(அ) சட்டபூர்வ பணிகள்

(ஆ) நிருவாகப் பணிகள்

(இ) ஆலோசனை வழங்கும் இனங்கள்

(ஈ) பயிற்சி

<u>1 (2) (அ) சட்டபூர்வ பணிகள்</u>

மனித வளங்களின் செம்மையான செயல்பாடுகள் மூலம் சேவைத் தரத்தை வழங்குவதற்கு, நிருவாகத்திலும், தெளிவுரை வழங்குவதிலும், சமத்துவத்தை கடைபிடிக்கும் வகையில் உரிய சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் இத்துறையால் நிருவகிக்கப்படுகின்றன.

<u>இத்துறையால் நிருவகிக்கப்படும் முக்கிய சட்டங்கள் பின்வருமாறு :–</u>

- தமிழ் நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 [தமிழ் நாடு சட்டம் எண். 14/2016];
- தமிழ் நாடு லோக்ஆயுக்தா சட்டம், 2018 (தமிழ் நாடு சட்டம் எண்.33/2018);

<u>1 (2) (ஆ) நிருவாகப் பணிகள்</u>

பணியாளர்கள் தொடர்பான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை அனைத்து துறைகளும் பின்பற்றுவதை மனிதவள மேலாண்மைத் துறை உறுதிப்படுத்துகிறது. இவற்றை திறம்பட செயலாக்கத்திற்கு கொண்டுவரும் பொருட்டு விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை புதுப்பித்திடவும், எளிமைப்படுத்திடவும் இத்துறை உரிய ஆலோசனைகளை வழங்குகிறது.

<u>பணி விதிகள்</u>

i. தமிழ்நாடு அரசுப் பணியாளர் நடத்தை விதிகள், 1973.

ii. தமிழ்நாடு அரசு அடிப்படை விதிகள்.

iii. தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள், 1955.

iv. தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள், 1955.

v. தமிழ்நாடு அமைச்சுப் பணிக்கான சிறப்பு விதிகள், 1952.

vi. தமிழ்நாடு அடிப்படைப் பணிக்கான சிறப்பு விதிகள், 1971.

vii. தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணிக்கான சிறப்பு விதிகள், 1952.

viii. தமிழ்நாடு பொதுப்பணிக்கான சிறப்புவிதிகள், 1969 இனம் XII மற்றும் XII–A.

ix. தமிழ்நாடு பொதுசார்நிலைப்பணிக்கான சிறப்பு விதிகள்– இனம் XXII

<u>அரசமைப்பு மற்றும் சட்டரீதியான அமைப்புகள் தொடர்பான விதிகள்</u>

x. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய ஒழுங்கு முறைகள், 1954.

xi. தமிழ்நாடு தகவல் பெறும் உரிமை (கட்டணம்) விதிகள், 2005.

xii. தமிழ்நாடு தகவல் ஆணைய (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012.

xiii. தமிழ்நாடு தகவல் ஆணையப் பணி விதிகள், 2017.

xiv. தமிழ்நாடு லோக் ஆயுக்தா விதிகள், 2018.

1(2)(இ) ஆலோசனை வழங்கும் இனங்கள்:–

தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள், தலைமைச் செயலக அறிவுறுத்தங்கள் உள்ளிட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை வரையறுத்து செயல்படுத்தும் துறையாக இத்துறை இருப்பதால், பல்வேறு வழிகாட்டுதல்கள் மற்றும் சட்டக்கூறுகள் உள்ளிட்ட ஏனைய பின்வரும் நேர்வுகளில் இத்துறையை தலைமைச் செயலகத் துறைகள் கலந்தாலோசிக்கின்றன:–

- காலியிடங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் பல்வேறு பதவிகளுக்கான தேர்ந்தோர் பெயர்ப்பட்டியல் தயாரித்தல்.
- பணி வரன்முறை மற்றும் தகுதிகாண் பருவ விளம்பல் நேர்வுகளில் தெளிவுரைகள் வழங்குதல்.

- அடிப்படை விதிகளில் தெளிவுரைகள் வழங்குதல்.

- முதுநிலை திருத்தம் தொடர்பான கருத்துருக்களை ஆய்வு செய்தல்.

- சிறப்பு / தற்காலிக விதிகளை உருவாக்கவும், திருத்தங்கள் மேற்கொள்ளவும், ஆலோசனை வழங்குதல்.

- அரசுப் பணியாளர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கைகள் குறித்த நேர்வுகளில் ஆலோசனை வழங்குதல்.

<u>1 (2) (ஈ) பயிற்சி</u>

அரசு ஊழியர்களின் திறமையையும் அறிவையும் தொடர்ந்து மேம்படுத்தி, அவர்களின் பொறுப்புகளை திறம்பட நிறைவேற்றும் வகையில், அடிப்படை மற்றும் இடைநிலைப் பயிற்சிகளை அளிப்பது இத்துறையின் முக்கியச் செயலாகும்.

1(3)<u>இத்துறையின் குறிக்கோள்கள் பின்வரும் அரசமைப்பு, சட்டரீதியான அமைப்புகள் மற்றும் துறைத் தலைமையிலான நிருவாக அமைப்புகளால் செயல்படுத்தப்படுகிறது</u> :–

அ) அரசமைப்பு நிறுவனம்

- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

ஆ) சட்டரீதியான அமைப்புகள்

- தமிழ்நாடு தகவல் ஆணையம்
- தமிழ்நாடு லோக் ஆயுக்தா
- விழிப்புப்பணி ஆணையம்
- ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்கள்

இ) துறைத் தலைமைகள்

- ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம்
- பயிற்சித்துறைத் தலைவர்

## 2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 315(1)–ன் கீழ் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அமைக்கப்பட்டுள்ளது. இத்தேர்வாணையம், ஒரு தலைவர் மற்றும் பதினான்கு உறுப்பினர்களைக் கொண்டதாகும். தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பணி நிபந்தனைகள், 1954–ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் நிருவகிக்கப்படுகின்றன.

மாநில அரசுக்கு தேவையான மனித வளத்தினை தெரிவு செய்து அளிக்கும் பணியில் தேர்வாணையம் முதன்மை தெரிவு முகமையாக செயல்பட்டு வருகின்றது. அரசுத் துறைகளின் தேவைகளுக்கு ஏற்ப பல்வேறு தகுதிகளும், திறனறிவும் கொண்ட நபர்களை தேர்வாணையம் தெரிவு செய்கிறது. இயற்கை இடர்பாடாக இருந்தாலும், செயற்கை விபத்தாக இருந்தாலும், மக்கட் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலாக இருந்தாலும், கட்டமைப்புகளை விரிவாக்கும் களப்பணிகளாக இருந்தாலும், அரசு தம் பணியாளர்களைக் கொண்டு மகத்தான பணிகளை ஆற்றுவதற்காக முழு தகுதியும் திறமையும் கொண்ட நபர்களை தெரிவு செய்திடும் பணியினை தேர்வாணையம்

உறுதி செய்கிறது. மக்கட் சேவை அனைத்திலும் அரசே முன் நிற்கிறது. அவ்வாறே அதன் பணியாளர்களும் உள்ளனர்.

<u>2(1) பொதுவான பணிகள்</u>

அரசுப் பணிகளுக்கு பணியாளர்களை தெரிவு செய்வது மட்டுமின்றி அப்பணியாளர்களுக்கான துறைத் தேர்வுகளையும் நடத்தி அவர்களை அரசுப்பணியின் முழு உறுப்பினராக வழி வகை செய்வதுடன், அகில இந்தியப் பணிகள் மற்றும் மாநில பணிகள் சார்ந்த அலுவலர்களுக்கான மொழித் தேர்வுகளையும் ஆண்டிற்கு இருமுறை நடத்துகிறது. இதுமட்டுமின்றி, ஒன்றிய அரசின் பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் சார்பாக டேராடூன் இந்திய இராணுவக் கல்லூரியில் மாணவர்களுக்கான நுழைவுத் தேர்வுகளையும் தேர்வாணையம் நடத்துகிறது.

மேலும், பணியாளர்களைத் தெரிவு செய்தல் பற்றிய விதிகளை இயற்றுவது, பணி நியமனம், பதவி உயர்வுகள் மற்றும் ஒரு பணியிலிருந்து மற்றொரு பணிக்கு மாறுதல் முறையில் நியமனம் செய்தல் ஆகியவற்றில் பின்பற்றப்பட வேண்டிய நெறிகளை வகுப்பது குறித்தும், அரசுப் பணியாளர்கள் தொடர்பான

ஒழுங்குமுறை நடவடிக்கைகள் மீதான மேல்முறையீடு குறித்தும் அரசுக்கு ஆலோசனை வழங்குகிறது.

<u>ஆண்டு திட்ட அட்டவணை</u>

தேர்வர்கள் தங்களை முன்னதாகத் தயார் செய்து கொள்ள ஏதுவாக, ஒவ்வொரு ஆண்டும் தொடங்குவதற்கு முன்னரே, தேர்வாணையம் போட்டித் தேர்வுகளுக்கான ஆண்டு திட்ட அட்டவணையை வெளியிடுகிறது. மேலும், தேர்வர்களின் வசதிக்காக, பல்வேறு தேர்வுகளுக்கான நடைமுறைகள், பாடதிட்டங்கள் உள்ளிட்ட விவரங்கள் தேர்வாணையத்தின் வலைதளத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

<u>2(2) தெரிவு நடவடிக்கையில் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துதல்</u>

அரசுப் பணிகளுக்கான தெரிவுகளில், பொருத்தமான தொழில்நுட்ப உத்திகளை பயன்படுத்தி தேர்வாணையத்தால் நடத்தப்படுகின்ற போட்டித் தேர்வுகள் வெளிப்படைத் தன்மையுடனும், நேர்மையுடனும் நடத்தப்படுகின்றன என்ற பெரும் நம்பிக்கையை வேலை வாய்ப்பினை எதிர்நோக்கி காத்திருப்போர்களின் மனங்களில் ஏற்படுத்தும் வண்ணம் தேர்வாணையம் முனைப்புடன் செயல்படுகிறது.

(i) மதிப்பீடு செய்தலில் தேர்வர்களின் பங்கேற்பு

- ✓ தெரிவு செயல்முறைகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் நேர்மையைப் கடைபிடிக்கும் வகையில் தேர்வு முடிவடைந்த உடன் கொள்குறி வகைக்குரிய உத்தேச விடைகள் (Answer Keys) தேர்வாணையத்தின் இணையதளத்தில் வெளியிடப்படுகிறது.
- ✓ தேர்வர்களுக்கு விடைகள் குறித்து ஏதேனும் மறுப்பு இருப்பின் அது குறித்த கோரிக்கைகளை ஏழு நாட்களுக்குள் தேர்வாணையத்திற்கு தெரிவிக்க கால அவகாசம் அளிக்கப்படுகிறது.
- ✓ வினாக்களின் சரித்தன்மை மற்றும் விடைகள் குறித்து தேர்வர்களின் கருத்துகளை உடனடியாக கருத்தில் கொண்டு இணைய வழியில் இறுதி விடைகள் (Final Answer Keys) விரைவாக வெளியிடப்படுகின்றன.

(ii) தொழில் நுட்ப அடிப்படையிலான பாதுகாப்புகள்:–

- ✓ தேர்வு நடைமுறைகளில் கண்காணிப்பினை பலப்படுத்தும் பொருட்டு, தேர்வு நடைபெறும் அனைத்து தேர்வு மையங்கள் / அறைகள், ஒளிப்பதிவுக் கருவிகளின் வழியாக (videographing) கண்காணிக்கப்படுகின்றன.

- ✓ அனைத்துப் போட்டித் தேர்வுகளிலும் தேர்வு எழுதுபவர்களின் பெயர், பதிவு எண், புகைப்படம் போன்ற அனைத்து விவரங்களும் அச்சிடப்பட்ட தன்விவர கொள்குறி விடைத்தாட்கள் (Personalised OMR) வழங்கப்பட்டு வருகின்றன.

- ✓ வெளிமாவட்ட மையங்களிலிருந்து தேர்வாணையத்திற்கு மந்தணத்தன்மை கொண்ட பொருட்களை கொண்டுவரும் வாகனங்களில் CCTV கேமராக்கள் பொருத்தப்பட்டு, முழுவதும் பதிவு செய்யப்படுகிறது.

- ✓ தேர்வு தொடர்பான பொருட்களை கொண்டு வரும் குறிப்பிட்ட வாகனங்கள் மற்றும் அவற்றின் வழித்தட நகர்வுகளை கண்காணிக்கும் பொருட்டு, புவியிடம் காட்டும் (GPS) பூட்டுகள் மூலம் திறந்தும் மூடும் வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- ✓ புவியிடம் காட்டும் (GPS) பூட்டுகள் திறப்பதற்கான தொலைதூரக் கட்டளைகள் தேர்வாணைய அலுவலகத்தில் இயங்கும் கண்காணிப்பு குழுவினரால் மட்டுமே வழங்க இயலும்.

- ✓ தேர்வு தொடர்பான மந்தணத்தன்மை கொண்ட பொருட்களை கொண்டு வரும் வாகனங்களை ஒரு வருவாய் அலுவலர், காவல் துணை ஆய்வாளர், தேர்வாணைய அலுவலர் ஆகியோர் கொண்ட வழிக்காவல் குழு (Escort) மூலம் பின்தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது.

<u>2 (3) ஒரு முறை பதிவு செய்தல்</u>

<u>(i) பதிவுகளும் தரவுகளும்</u>

- ✓ தேர்வர்கள் தமது கையொப்பம் மற்றும் புகைப்படம் உள்ளிட்ட தன் விவர குறிப்புகளை தரவு தளத்தில் 'ஒரு முறை பதிவு செய்யும்' (One Time Registration) முறை செயல்பாட்டில் உள்ளது. இப்பதிவானது ஐந்து ஆண்டுகளுக்கு செல்லத்தக்கதாகும். பிறகு இதனைப் புதுப்பித்துக் கொள்ளலாம். ஒன்றுக்கும் மேற்பட்ட ஒருமுறைப்பதிவு அடையாள விவரங்களை (Identification) உருவாக்குவதை தடுக்கும் வகையில், விண்ணப்பதாரர்கள் தங்களுடைய பதிவுடன் ஆதார் விவரங்களை இணைப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

(ii) <u>இணைய வழி விண்ணப்பம்</u>

- ✓ தேர்வாணையம், இணைய வழியில், பொதுச் சேவை மையங்கள் மூலமாக சான்றிதழ் சரிபார்த்தல் முறையை அறிமுகப் படுத்தியுள்ளதால் தேர்வர்களுக்கு நேரும் பயணச் செலவும், கால விரயமும் தவிர்க்கப்படுகிறது.

- ✓ அனைத்துத் தேர்வுகளுக்கும், இணையதளம் வழியாக மட்டுமே விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன.

<u>(iii) ஒருங்கிணைந்த கைப்பேசி செயலி</u>

- ✓ அரசுப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகளை எதிர்நோக்கி காத்திருக்கும் விண்ணப்பதாரர்கள், மாநிலத்தின் தெரிவு முகமைகள் நடத்தும் பல்வேறு போட்டித் தேர்வுகள் குறித்த தகவல்களை அறிந்து கொள்வதற்கும், விண்ணப்பத்தினை எளிதாக பதிவேற்றம் செய்யவும் ஒருங்கிணைந்த கைப்பேசி செயலி ஒன்று முன்னோடியாக செயலாக்கப்பட்டு வருகிறது.

(iv) தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான கலந்தாய்வு

- ✓ அலகு / பணி ஒதுக்கீட்டிற்கு கலந்தாய்வு முறை பின்பற்றப்படுவதுடன், காலிப்பணியிடங்கள் குறித்த விவரங்களும் தேர்வாணைய இணையதளத்தில் உடனுக்குடன் வெளியிடப்படுகிறது.

(v) மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு வசதிகள்

- ✓ மாற்றுத் திறனாளி விண்ணப்பதாரர்கள் அனைத்துத் தேர்வு மையங்களையும் சுலபமாக அணுகுவதற்கு ஏதுவாக, அவர்களுக்கு தரைத் தளத்திலேயே தேர்வு எழுதுவதற்கு தேர்வாணையம் வசதி செய்து கொடுத்துள்ளது. தேவை ஏற்படின், எழுத்தர்களும் அனுமதிக்கப்படுகின்றனர். மேலும், எழுத்துத் திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரர்கள் பயன்பெறும் வகையில் தேர்வு எழுதுவதற்கு கூடுதல் நேரம் வழங்கப்படுகிறது. அவ்வாறே தெரிவு செய்யப்பட்ட மாற்று திறனாளிகளுக்கு கலந்தாய்வு வசதிகளும் அளிக்கப்படுகின்றன.

2(4) துறை பதவி உயர்வுக் குழு

உயர்நிலை அரசுப் பணியாளர்களின் பதவி உயர்வு தொடர்பான நேர்வுகளிலும் தேர்வாணையம் பங்கேற்பதுடன், துறை பதவி உயர்வுக் குழுவின்

பரிசீலனைக்கு அனுப்பப்படும் கருத்துருக்களை கூர்ந்தாய்ந்து பரிந்துரைக்க ஒற்றைச் சாளர முறை, தேர்வாணையத்தால் பின்பற்றப்படுகிறது.

பதவி உயர்வு மற்றும் மாறுதல் மூலம் பணி நியமனம் பெறும் தொகுதி–A ஊதிய நிலை 25–க்கு மேல் உள்ள நுழைவு நிலையிலான பதவிகள் மட்டும் தேர்வாணையத்தின் துறை பதவி உயர்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்படுகிறது. ஏனைய அனைத்துப் பதவிகளுக்குமான தேர்ந்தோர் பெயர்ப்பட்டியலுக்கான கருத்துருக்கள் அந்தந்த துறைகளுக்கான பதவி உயர்வு குழுவின் முன் வைக்கப்படுகிறது.

<u>2(5) கட்டாயத் தமிழ் மொழித் தகுதித் தேர்வு</u>

மாநிலத்தில் உள்ள அனைத்து தெரிவு முகமைகள் நடத்தும் போட்டித் தேர்வுகளிலும் கட்டாயத் தமிழ் மொழித் தகுதித்தேர்வு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கேற்ப, 2016 ஆம் ஆண்டைய தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டத்தில் உரிய திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

<u>2(6) துறைத் தேர்வுகள்</u>

தேர்வாணையம் மே 2021 ஆம் ஆண்டு முதல் பதவி உயர்வுக்கு தேவையான துறைத் தேர்வு முடிவுகளை செம்மைப்படுத்தி விரைந்து

வெளியிடுவதற்கு கணினி அடிப்படையிலான தேர்வுமுறைகளை அறிமுகப்படுத்தி நடத்தி வருகிறது.

2(7) தேர்வாணையத்திற்கு கூடுதல் பணிகள்

அரசுத் துறைகள் மற்றும் அரசின் பொதுத் துறை நிறுவனங்களின் பணியாளர்களின் தெரிவு சீராக அமைய வேண்டி, அரசின் பொதுத்துறை நிறுவனங்கள், சட்டப்பூர்வமான வாரியங்கள், குழுமங்கள் உள்ளிட்ட அமைப்புகளில் உள்ள சில பணியிடங்களை நிரப்பும் வகையில் தேர்வாணையத்திற்கு கூடுதல் பணி வழங்கப்பட்டுள்ளது.

இதற்காக, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய (கூடுதல் செயற்பணிகள்) சட்டம், 2022 மற்றும் அதற்குரிய விதிகள் ஆகியவை இயற்றப்பட்டுள்ளன. இச்சட்டம் 17.03.2022 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது.

மேற்காணும் சட்டத்தின் அடிப்படையில், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மற்றும் ஆவின் ஆகிய நிருவனங்களிலிருந்து சில பதவிகளுக்கான ஆட்களை தெரிவு செய்து தருமாறு தேர்வாணையத்திற்கு கோரிக்கைகள் வரப்பெற்று, அப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

2 (8) ஆண்டறிக்கை

ஆணையத்தின் ஆண்டறிக்கை ஒவ்வொரு ஆண்டும் மாநில சட்டமன்ற பேரவையில் வைக்கப்படுகிறது.

2 (9) தெரிவுகளில் போக்கு

மாநிலத்தின் பணியாளர் தெரிவு விவரங்கள் வரைபடங்களாக பிற்சேர்க்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

## 3. தமிழ்நாடு தகவல் ஆணையம்

ஒவ்வொரு பொது அதிகார அமைப்பின் செயல்பாட்டிலும் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை மேம்படுத்துவதற்காக, அவற்றின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள தகவல்களை குடிமக்களுக்கு வழங்குவதற்கு, தகவல் அறியும் உரிமைச் சட்டம் வழிவகுக்கின்றது. மக்களாட்சியின் உண்மையான உணர்வை வெளிப்படுத்துவதுடன் ஆளுமையில் மக்களின் பங்கேற்பை இச்சட்டம் உறுதி செய்கிறது. இதனடிப்படையில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, மாநில தகவல் ஆணையத்தால் செயல்படுத்தப்படுகிறது.

தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–ன் படி 07.10.2005 அன்று தமிழ்நாடு தகவல் ஆணையம் ஏற்படுத்தப்பட்டது. தகவல் ஆணையம் ஒரு தலைமை தகவல் ஆணையர் மற்றும் ஆறு தகவல் ஆணையர்களை கொண்டதாகும்.

பொதுத் தகவல் அலுவலர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மனுதாரர் கோரும் தகவலை குறிப்பிட்ட கால வரம்பிற்குள் வழங்குவதற்கு பொறுப்பானவர். அதன் மீதான மேல்முறையீடு, பொது அதிகார அமைப்பினால் பதவியமர்த்தப்பட்ட மேல்முறையீட்டு அலுவலரால் தீர்வு செய்யப்படுகிறது.

இதன் பின்னர் பெறப்படும் மேல்முறையீடுகள் மாநில தகவல் ஆணையத்தால் மேற்படி சட்டத்தின் படி தீர்வு செய்யப்படுகிறது.

பணிகள், ஆவணங்கள் மற்றும் பதிவேடுகளை ஆய்வு செய்வதற்கும் சான்றளிக்கப்பட்ட நகல்களைப் பெறுவதற்கும் பொது மக்களுக்கு இச்சட்டம் அதிகாரம் அளிக்கிறது.

மேலும், அனைத்துத் துறைகளும் தத்தமது துறைகளில் மேற்கொள்ளப்படுகின்ற மக்கள் நலதிட்டங்கள் மற்றும் இதர பொது முக்கியத்துவம் வாய்ந்த விவரங்கள் அனைத்தையும் தாமாகவே முன்வந்து வெளியிட்டு வருகின்றன.

3(1) இணைய வழி சேவை

தகவல்களை பொது மக்கள் எளிதாக பெறுவதற்காக இணைய வழி சேவை படிப்படியாக வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழான மனுக்களையும், முதல் மேல்முறையீட்டு மனுக்களையும், இணைய வழியில் (www.rtionline.tn.gov.in) கட்டணம் செலுத்தி தாக்கல் செய்வதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இரண்டாவது மேல் முறையீடுகளையும் இணையவழியில் தாக்கல் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பான வழக்குப் பட்டியல்கள் மற்றும் முடிவுகள் ஆணையத்தின் இணையதளத்தில் (www.tnsic.gov.in) பதிவேற்றம் செய்யப்படுகின்றன. மேலும், ஆணையத்தால் இம்மனுக்கள் காணொலி (Virtual Mode) முறையிலும் விசாரிக்கப்படுகின்றன.

25.06.2021 முதல் மனித வள மேலாண்மைத் துறையில் மனுக்கள் மற்றும் முதல் மேல்முறையீட்டு மனுக்கள் இணைய வழியில் பெறப்பட்டு தகவல்கள் அளிக்கப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, 08.08.2022 முதல் இவ்வசதி தலைமைச் செயலகத்தில் உள்ள அனைத்துத் துறைகளிலும் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

மேலும், 14.02.2023 முதல் இவ்வசதி வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள துறைத் தலைமை அலுவலகங்களிலும், நிலஅளவை இயக்குநரகத்தின் கீழ் உள்ள மாவட்ட அலுவலகங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களிலும் படிப்படியாக இது நடைமுறைப்படுத்தப்படும்.

3(2) மாற்றுத் திறனாளிகளுக்கான தகவல் பெறும் வசதி

பார்வைத்திறன் குறைபாடு உடையோர்களின் கோரிக்கையின் பேரில், ஆணையத்தின் ஆணைகள், பிரெய்லி எழுத்து வடிவில் வழங்கப்படுகிறது. சென்னையில் அமைந்துள்ள பார்வையற்ற நபர்களுக்கு அதிகாரமயமாக்குதலுக்கான தேசிய நிறுவனத்தின் ஒருங்கிணைப்புடன் இச்சேவை வழங்கப்படுகிறது. இச்சேவை வழங்குவதில் இவ்வாணையம் நாட்டிலேயே முன்னோடியாக திகழ்கிறது.

3(3) உதவி மையம்

பொது மக்கள் மற்றும் பொதுத் தகவல் அலுவலர்களுக்கு, விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் மற்றும் தகவல் அளித்தல் தொடர்புடைய பல்வேறு நடைமுறைகள் குறித்து தேவையான உதவிகளை வழங்கும் வகையில், தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் வளாகத்தில் ஓர் உதவி மையம் (Help Desk) செயல்பட்டு வருகிறது. மேலும், ஆணையத்தில் இரண்டாவது மேல்முறையீடுகளின் நிலையை பார்வையிடுவதற்கும் உதவுகிறது.

3 (4) தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறித்த பயிற்சி

இச்சட்டத்தின் நோக்கத்தை முழுமையாக நிறைவேற்றவும், நிலுவையில் உள்ள மனுக்களை

குறைக்கவும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்படும் மனுக்கள் மற்றும் மேல்முறையீடுகளை தீர்வு செய்வதற்கு மாநிலம் முழுவதும் உள்ள பொதுத் தகவல் அலுவலர்கள் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர்களுக்கு அவ்வப்போது பயிற்சி அளிக்கப்படுகிறது.

<u>3(5) ஆண்டு அறிக்கை</u>

ஆணையத்தின் ஆண்டறிக்கை ஒவ்வொரு ஆண்டும் மாநில சட்டமன்ற பேரவையில் வைக்கப்படுகிறது.

<u>3(6) நிலையான வளர்ச்சி இலக்குகள்</u>

நிலையான வளர்ச்சி இலக்குகளை பொறுத்தவரை, பின்வரும் விவரங்கள் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துகின்றன:–

- ✓ மாநிலம் முழுவதும் ஆண்டுதோறும் 3 லட்சத்திற்கும் அதிகமான தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுக்கள் பெறப்பட்டு அவை, தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்படி, பொதுத் தகவல் அலுவலர்களால் தீர்வு செய்யப்படுகின்றன.

- ✓ அரசு அலுவலகங்களில் தகவல் கோரி வருகின்ற பொதுமக்களின் வருகை கணிசமாக குறைந்துள்ளது. (குறியீடு எண்.16.6.3).
- ✓ பொது மக்களால் கோரப்படும் தகவல்கள், கால வரம்புக்குள் அளிக்கப்பட்டு வருகின்றன. (குறியீடு எண்கள்.16.6.2 மற்றும் 16.10.1).

## 4. மாநில விழிப்புப் பணி ஆணையம்

4(1) தமிழ்நாடு விழிப்புப்பணி ஆணையம் 1965–ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. பொதுப் பணிகளில், ஊழல் தடுப்பு நடவடிக்கைகள், தூய நிருவாகம் உள்ளிட்ட அலுவல் ரீதியான பணிகளில் அரசுக்கு அறிவுரை வழங்குதல், இவ்வாணையத்தின் முதன்மையான பணிகளாகும். ஊழல் குறித்த ஒவ்வொரு இனங்களிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை வழங்குதலும் இவ்வாணையத்தின் பணியாகும். மாநிலத்தின் சட்டபூர்வ அமைப்புகள், பல்கலைக்கழகங்கள், நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து பொது ஊழியர்கள் மீது விழிப்புப்பணி ஆணையம் தமது வரம்பினை கொண்டுள்ளது.

<u>4 (2) விழிப்புப் பணி ஆணையத்தின் நோக்கங்கள்:</u>

(i) பொது ஊழியர் எவரேனும் நாணயமற்ற வகையில் நடந்து கொண்டதாகவோ அல்லது ஊழல் புரிந்துள்ளதாகவோ அல்லது தன்னுடைய அதிகாரத்தை தவறான அல்லது ஊழல் நோக்கத்திற்காக பயன்படுத்தியதாகவோ அல்லது தனது அதிகாரத்தை உரிய முறையில்

பயன்படுத்தாமை பற்றியோ கூறப்படும் புகார் மீது விசாரணை ஏற்படுத்தும் நடவடிக்கையினை மேற்கொள்ளுதல்;

(ii) இதற்காகத் தேவைப்படும் தகவல் அல்லது புள்ளி விவரங்களை சேகரித்தல்; மற்றும்

(iii) ஆணையத்தின் பரிந்துரைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விவரங்களை, எந்தவொரு அரசுத் துறை அல்லது அரசு நிறுவனங்களிடமிருந்து கேட்டுப் பெறுதல்.

## 5. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம்

5(1) பொது நிர்வாகத்தில் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை திறம்படக் கையாளும் பொருட்டு, முறைப்படுத்தப்பட்ட முதல் இயக்கமாக 1964–இல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம் ஏற்படுத்தப்பட்டது. இவ்வியக்ககத்திற்கு காவல் துறை இயக்குநர் (DGP) நிலையில் ஓர் இயக்குநர் தலைமை வகிக்கிறார். இயக்குநருக்கு உறுதுணையாக இணை இயக்குநர், துணை இயக்குநர், காவல் கண்காணிப்பாளர், துணை காவல் கண்காணிப்பாளர் மற்றும் சட்ட அலுவலர்கள் பணியாற்றுகிறார்கள். இவ்வியக்ககத்தின் கீழ் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகங்கள் மாநிலம் முழுவதும் செயல்பட்டு வருகின்றன.

<u>5(2) ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகத்தின் முக்கிய பணிகள்:–</u>

i) மாநில அரசு, மாநில விழிப்புப்பணி ஆணையம் மற்றும் லோக் ஆயுக்தா ஆகியவற்றால் பரிந்துரைக்கப்படும் ஊழல் குற்றச்சாட்டுகள் மற்றும் அது தொடர்பான முறைகேடுகளின் மீது விசாரணைகள் / புலனாய்வு மேற்கொள்வது.

ii) இவ்வியக்ககத்தால் சேகரிக்கப்படும் தகவல்கள் மற்றும் புள்ளிவிவரங்களை மாநில விழிப்புப்பணி ஆணையத்துக்கு சமர்ப்பித்தல்.

iii) பொது ஊழியர்கள் மீது சாட்டப்படும் ஊழல் தொடர்பாக, பொது மக்களிடமிருந்து பெறப்படும் புகார்களின் மீது விசாரணை மேற்கொள்வது.

iv) ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் பெறப்படும் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான புகார்களில் நுண்ணறிவுத் தகவல்களை சேகரித்து ஊழல் தடுப்புச் சட்டம் 1988 மற்றும் ஊழல் தடுப்பு (திருத்தச்) சட்டம் 2018–இன்படி புலனாய்வு செய்வது.

v) உரிய ஆதாரங்களுடன் கூடிய புகார்களின் அடிப்படையில், ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடும் அரசு ஊழியர்களை, இலஞ்சம் வாங்கும் பொழுது, தகுந்த முறைகளைப் பின்பற்றி பொறி வைத்து கையும் களவுமாகப் பிடித்தல்.

5(3) ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விரைந்து விசாரிப்பதற்காக, சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம், சிவகங்கை, திருநெல்வேலி மற்றும் விழுப்புரம் ஆகிய எட்டு இடங்களில் சிறப்பு நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. மேலும், மாநிலம் முழுவதும் அந்தந்த மாவட்டங்களில் உள்ள முதன்மை அமர்வு

நீதிபதிகளுக்கும், மாவட்ட சிறப்பு நீதிமன்றங்களிலுள்ள நீதிபதிகளுக்கும், ஊழல் தடுப்புச் சட்டம், 1988–ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விசாரிக்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

5(4) வெளிப்படைத் தன்மையை பேணுவதற்கும் எளிமையான அணுகு முறையை ஊக்குவிப்பதற்கும், அவ்வியக்ககத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் வழக்குகளில் ஊழல் புகார்கள் தொடர்பான வழக்குகளின் ஆண்டு வாரியான புள்ளி விவரங்கள் இயக்கக இணையதளத்தில் வெளியிடப்பட்டு வருகின்றன. மின்னஞ்சல் வாயிலாக பெறப்படும் புகார்களும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

5(5) காவல்துறையில் உள்ள சட்டம் மற்றும் ஒழுங்கு மண்டலங்களை கருத்தில் கொண்டு, (i) சென்னை நகர சரகம் (ii) வடக்கு சரகம் (iii) மேற்கு சரகம் (iv) மத்திய சரகம் மற்றும் (v) தெற்கு சரகம் என ஐந்து சரகங்கள் இவ்வியக்ககத்திலும் உருவாக்கப்பட்டுள்ளது. 46 பிரிவு அலுவலகங்கள் இச்சரகங்களின் வரம்புகளுக்கு உட்பட்டவையாகும். இதுதவிர, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மீதான வழக்குகள் / விசாரணைகளை விசாரிப்பதற்காக சென்னை சரகத்தில் ஒரு சிறப்பு புலனாய்வு பிரிவு (SIC) ஏற்படுத்தப்பட்டு கடந்த 1996 முதல் இயங்கி வருகிறது.

5(6) வருமானத்திற்கு அதிகமாக சொத்து குவிப்பு வழக்குகள் / விசாரணைகள் சம்மந்தமாக, விவசாயம் / தோட்டக்கலை மூலம் பெறப்பட்ட வருவாய் விபரங்கள் வருமான வரித்துறையிலிருந்து பெறப்பட்ட விபரங்கள் ஆகியவற்றை கூர்ந்தாய்வு செய்வது குறித்து மேற்பார்வை / விசாரணை அதிகாரிகளுக்கு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. சமீபகாலத்திய நீதிமன்ற தீர்ப்புகள் பற்றி அவ்வியக்ககக சட்ட அலுவலர்களுக்கு கலந்தாய்வு வகுப்புகளும் நடத்தப்பட்டன.

5(7) ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தால் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாத இறுதி வாரத்தில் விழிப்புணர்வு வார விழா நடத்தப்படுகிறது. அதன்படி கடந்த 2022–ஆம் ஆண்டு பின்வரும் நிகழ்வுகளின் வாயிலாக விழிப்புணர்வு வார விழா கொண்டாடப்பட்டது :–

- மாநிலம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் கண்காணிப்பு விழிப்பு தொடர்பான நிகழ்வுகள் பல அரசு அலுவலகங்களிலும், பொது இடங்களிலும் நடத்தப்பட்டு, அரசு அலுவலர்கள் மற்றும் பொது மக்களிடம் துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

- கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களிடையே கட்டுரை எழுதுதல் மற்றும் குறும்படம் தயாரிக்கும் போட்டிகள் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டன. போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு மாவட்ட அதிகாரிகள் பரிசுகளையும் சான்றிதழ்களையும் வழங்கினர்.

- விழிப்புணர்வு பதாகைகளை ஏந்திய மாணவர்களின் பேரணியும், இரண்டு சக்கர வாகன பேரணியும் நடத்தப்பட்டது.

- தமிழ்நாடு முழுவதும் கல்லூரி மாணவர்களால் தெருமுனை பிரச்சாரங்கள் மூலமாக கண்காணிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது.

5(8) வருமானவரி, வங்கிகள் மற்றும் பொருளாதார கணக்கு விவரங்கள் தொடர்பான பெருமளவிலான கணக்கு விவரங்களையும், பதிவேடுகளையும், நிறுவனங்களின் பதிவாளர்களிடமிருந்து பெற்று கூர்ந்தாய்வு செய்யவும், மின்னணு கருவிகளான கணினி வன்பொருள், மடிக்கணினிகள், கைபேசிகள் போன்றவற்றின் விவரங்களை கூர்ந்தாய்வு செய்யவும் இவ்வியக்கக விசாரணை அதிகாரிகளுக்கு உதவி

செய்யும் நோக்கில் (i) பட்டயக் கணக்கர்கள் (ii) ஓய்வு பெற்ற வங்கி அலுவலர்கள் (iii) வருமான வரி அலுவலர்கள் மற்றும் (iv) இணையதள குற்ற தடயவியல் நிபுணர்கள் போன்ற பலதரப்பட்ட நிபுணர்களின் சேவைகளைப் பெற அனுமதி அளித்திருப்பதுடன் மேற்படி கூர்ந்தாய்வுக்கு தேவையான மென்பொருட்களை வாங்கவும் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## 6. ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்

6(1) மாநில அரசிலும், நகராட்சி நிர்வாக அமைப்புகளிலும் பணிபுரிந்து வரும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மீது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தால் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கு ஏற்படுத்தப்பட்ட அமைப்பே ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயமாகும். இத்தீர்ப்பாயம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தால் பணியாளர்கள் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் மீதான விசாரணையின் பொருட்டு, தேவைப்படும் சாட்சியங்களை விசாரிக்கவும் மற்றும் தொடர்புடைய ஆவணங்களைக் கோருவதற்கான நீதிமுறை சார்ந்த அதிகாரத்தைக் கொண்டுள்ளது. இவையாவும் தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள், 1955–இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொள்கின்றன.

6(2) சென்னை, திருச்சி, மதுரை, கோவை, திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில் ஆகிய நகரங்களில் ஆறு ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்திய ஆட்சிப்பணி அலுவலர்கள் / மாவட்ட வருவாய் அலுவலர்கள்

தலைமையில் செயல்படும் இத்தீர்ப்பாயங்களில் வழக்குகள் தொடர்பான விசாரணைகளுக்கு உதவி புரியும் வகையில், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தில் உள்ள சட்ட நடவடிக்கை தொடர்புடைய வழக்குரைஞர்களின் (Prosecutors for Disciplinary Proceedings) சட்டக் கருத்துகள் / ஆலோசனைகள் பெறப்படுகின்றன. வழக்கின் மீதான விசாரணை அறிக்கை சம்பந்தப்பட்ட அலுவலர் தொடர்புடைய அரசு நிருவாகத் துறைக்கு தீர்ப்பாயத்தால் அனுப்பப்படும். அவ்வறிக்கையினை ஆய்வு செய்து ஒழுங்கு நடவடிக்கை மீதான இறுதி ஆணைகளை அரசு பிறப்பிக்கும்.

## 6(3) துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கைகளுக்கான வழிகாட்டி நெறிமுறைகள்

- அரசுப் பணியாளர்கள் தங்களது பணியில் ஏற்பட்ட குறைபாடுகளுக்காக, பொறி வைத்து பிடிக்கப்படுவது மற்றும் கைது செய்யப்படுவது உள்ளிட்ட குற்ற வழக்குகளின் தொடர்ச்சியாக அவர்கள் மீது எடுக்கப்படுகின்ற துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கைகளில் கடைப்பிடிக்க வேண்டிய வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

- அரசுப் பணியாளர்கள் தற்காலிக பணியிடை நீக்கம் செய்யப்பட்ட நேர்வுகளை பொறுத்தவரையில், பணியிடை நீக்கம் தொடரலாமா அல்லது ரத்து செய்து மீண்டும் பணியில் சேர்க்கலாமா என்பது குறித்து உரிய அலுவலரால் குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆய்வு செய்யப்படுவதற்கான வழிகாட்டி நெறிமுறைகள் அடங்கிய தொகுப்பு வெளியிடப்பட்டுள்ளது.

- ஒழுங்கு நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில், அதன் ஒவ்வொரு நிலையிலும் வரையறுக்கப்பட்ட கால அளவுகள் தவறாமல் பின்பற்றி, கால தாமதத்தை தவிர்க்க வேண்டி, அவற்றில் இறுதி ஆணைகள் விரைவாக வெளியிடப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

6(4) தேவையற்ற நடவடிக்கைகளை தவிர்த்து, பணிகளில் எவ்வித தொய்வும் ஏற்படாத வண்ணம், பணியாளர்கள் மீதான துறை ஒழுங்கு நடவடிக்கைகள் மற்றும் தற்காலிக பணியிடை நீக்க நேர்வுகள் குறித்து நிர்வாகத்துறைகள் அனைத்தும் அவற்றை ஆய்வு செய்திட வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது.

## 7. தமிழ்நாடு லோக் ஆயுக்தா

7(1) லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டம், 2013ன் பிரிவு 63க்கு இணங்க தமிழ்நாடு லோக் ஆயுக்தா சட்டம், 2018, தமிழ்நாடு சட்டமன்றத்தால் இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் கீழ் விதிகளும் உருவாக்கப்பட்டுள்ளன. மேற்படி சட்டம் 13.11.2018 அன்று நடைமுறைக்கு வந்துள்ளது. தமிழ்நாடு லோக் ஆயுக்தா 21.04.2019 முதல் செயல்பட துவங்கியது.

7(2) தமிழ்நாடு லோக் ஆயுக்தா, நீதிமுறை சார்புடைய அமைப்பாகும். பொது ஊழியர்களுக்கு எதிரான ஊழல் மற்றும் அது தொடர்பான புகார்களை விசாரிப்பதற்காக தமிழ்நாடு லோக் ஆயுக்தா ஏற்படுத்தப்பட்டுள்ளது.

7(3) மாநிலம் முழுவதிலிருந்தும் வரும் புகார்கள், தமிழ்நாடு லோக் ஆயுக்தா சட்டம், 2018 அதன் கீழான விதிகள், ஊழல் தடுப்பு சட்டம், 1988 மற்றும் தொடர்புடைய சட்டங்களின் கீழ் பரிசீலனை செய்யப்பட்டு, மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

7(4) தமிழ்நாடு லோக் ஆயுக்தா சட்டத்தின் நோக்கம் தூய்மையான நிருவாகத்தையும், வெளிப்படைத் தன்மையையும், பொறுப்புணர்வையும், செம்மையான நிருவாகத்தையும் உறுதிப்படுத்துவதாகும்.

7(5) தமிழ்நாடு லோக் ஆயுக்தா, தலைவர் மற்றும் நான்கு உறுப்பினர்களை கொண்டதாகும். பல்வேறு நிலைகளிலான 103 பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

7(6) சென்னை, கிண்டியிலுள்ள திரு.வி.க., தொழிற்பேட்டை, சிட்கோ வளாகத்தில் 6 மற்றும் 7வது தளங்களில் தமிழ்நாடு லோக் ஆயுக்தா செயல்பட்டு வருகிறது.

7(7) <u>தமிழ்நாடு லோக் ஆயுக்தாவினை மேலும் வலுப்படுத்துதல்</u>

தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பொது அதிகார அமைப்பினர் மீது அளிக்கப்படும் ஊழல் புகார்களை விசாரிக்கும் பொருட்டு தமிழ்நாடு லோக் ஆயுக்தாவினை மேலும் வலுப்படுத்துதல் மற்றும் அதற்குத் தகுந்த அதிகாரமளிக்கும் வகையில், பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:–

- பெரும்பாலான மாநிலங்களோடு ஒப்பிடும்போது, தமிழ்நாடு லோக் ஆயுக்தா தலைவர் மற்றும் நான்கு உறுப்பினர்களுடன் முழுமையாக செயல்பட்டு வருகிறது.

- லோக் ஆயுக்தாவின் சிறப்பான செயல்பாட்டிற்காக, தேவையான நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளதுடன், போதுமான பணியாளர்களும் வழங்கப்பட்டு, காலிப்பணியிடங்கள் உடனுக்குடன் நிரப்பப்படுகின்றன.

- கணினி மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்காக ரூ.3,32,764/– கூடுதல் நிதி வழங்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு லோக் ஆயுக்தாவின் அதிகாரபூர்வ வலைதளத்தினை நிறுவுவதற்காக ரூ.1,11,274/– வழங்கப்பட்டுள்ளது.

- அலுவலக வளாகம் மற்றும் உபகரணங்களைப் பராமரிக்கும் பொருட்டு ரூ.79.45 இலட்சம் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

- இந்திய செயலக பயிற்சி மற்றும் வளர்ச்சி நிறுவனத்தால் நடத்தப்பட்ட, செயல்திறன் மேம்பாடு பயிற்சியில் கலந்து கொள்ளும் பொருட்டு, சார்புச் செயலாளர் நிலையில் இரு அலுவலர்களை அனுப்புவதற்காக தமிழ்நாடு லோக் ஆயுக்தாவிற்கு ரூ.94,398/– நிதி வழங்கப்பட்டுள்ளது.

இவ்விதமாக, போதுமான பணியாளர்களைப் பணியமர்த்தி தமிழ்நாடு லோக் ஆயுக்தாவினை வலுப்படுத்தியுள்ளதுடன், அதற்குத் தேவையான அலுவலகம், வாகனங்கள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன.

## 8. ஆய்வுப் பிரிவு

8(1) அலுவலக நிர்வாகத்தில் செயல்திறனை மேம்படுத்தவும், காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்க்கவும், தலைமைச் செயலகத் துறைகள், தலைமை அலுவலகங்கள், பொதுத் துறை நிறுவனங்கள், வாரியங்கள் மற்றும் மாநகராட்சி அலுவலகங்கள் ஆகியவை ஆய்வுப் பிரிவின் அலுவலர்களால் கால முறையில் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. அலுவலக நடைமுறைகள் குறித்த குறுகிய கால பயிற்சிகளும் பல்வேறு துறைகளைச் சார்ந்த அலுவலர்களுக்கு குறிப்பிட்ட கால இடைவெளியில் அளிக்கப்பட்டு வருகிறது.

8 (2) தலைமைச் செயலகத்தில் மூன்று ஆய்வுக் குழுக்கள் இயங்கி வருகின்றன. அரசு துணைச் செயலாளர் / மாவட்ட வருவாய் அலுவலர் நிலையிலுள்ள அலுவலர்களின் தலைமையில் தேவையான பணியாளர்களுடன் இந்த ஆய்வுக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. ஆய்வுத் திட்ட நிகழ்ச்சி நிரல்கள் ஆண்டுதோறும் வெளியிடப்பட்டு வருகிறது. ஒவ்வொரு குழுவும் தனித்தனியாக முதனிலை ஆய்வு செய்யும். ஆய்வுக்குப் பிறகு,

முதனிலை ஆய்வு குறிப்புகளில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகளின் பேரில், குறைகளைவு அறிக்கை அளிக்க வேண்டி ஆய்வுக்குறிப்புகள் அந்தந்த அலுவலகத்திற்கு வழங்கப்படுகிறது. அவ்வலுவலகத்திலிருந்து குறைகளைவு அறிக்கை பெறப்பட்ட பிறகு, இறுதி ஆய்வு, இந்திய ஆட்சிப் பணி அலுவலரால் மேற்கொள்ளப்படுகிறது. இறுதி ஆய்வு அலுவலர் அளிக்கும் பொதுவான கருத்துக்களின் அடிப்படையில், தலைமைச் செயலகத்தில் சம்பந்தப்பட்ட நிருவாகத் துறையால், தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஆய்வுக் குழுவிற்கு நகல் அனுப்புவதுடன், அவை பதிவு செய்து கொள்ளப்படும்.

8(3) மாநிலத்திலுள்ள அனைத்து அலுவலகங்களிலும், மாவட்ட அளவில் அமைந்துள்ள 11 மாவட்ட ஆய்வுக் குழுக்களால் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. துணை ஆட்சியர் தலைமையில் உள்ள ஆய்வுக்குழு அலுவலருடன் ஒவ்வொரு மாவட்ட ஆய்வுக் குழுவும், வட்டாட்சியர் நிலையில் உள்ள துணை ஆய்வுக் குழு அலுவலர் மற்றும் இதர பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன. இக்குழுக்கள், தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் அலுவலகங்களில் வருடாந்திர ஆய்வு மேற்கொள்வதுடன், திடீர் ஆய்வும் மேற்கொள்ளும்.

ஒழுங்குமுறை நடைமுறைகள், அலுவலக நடைமுறைகள் போன்றவற்றில் மாவட்டத்தில் உள்ள அலுவலர்களுக்கு பயிற்சி வகுப்புகளை நடத்துவதும் ஆய்வுக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட பணிகளில் ஒன்றாகும். மேலும், அந்தந்த மாவட்ட விழிப்புப் பணி மற்றும் ஊழல் தடுப்புத் துறையினரால் மேற்கொள்ளப்படும் ஊழல் தொடர்பான திடீர் சோதனைப் பணிகளிலும், இந்த ஆய்வுக் குழுக்கள் ஈடுபடுத்தப்படுகின்றன.

8(4) 2022–2023 ஆம் ஆண்டு, மார்ச் 2023 வரையிலான காலத்தில், தலைமைச் செயலக துறைகள், துறைத் தலைமை அலுவலகங்கள் மற்றும் வாரியங்களில், இத்துறையின் ஆய்வுக் குழுக்களால் 4 முதனிலை ஆய்வுகள் மற்றும் 12 இறுதி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

8(5) மேலும், 2022–2023 ஆம் ஆண்டு, மார்ச் 2023 வரையிலான காலத்தில், மாவட்ட ஆய்வுக் குழுக்கள், 120 ஆண்டாய்வுகள் மற்றும் 2828 திடீர் ஆய்வுகளை மேற்கொண்டதுடன், அந்தந்த மாவட்ட விழிப்புப்பணி மற்றும் ஊழல் தடுப்புக்குழு அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையில் 92 கண்காணிப்புக் கூட்டங்களையும் நடத்தியுள்ளன.

8(6) மேற்கண்ட பணிகளுடன், தேவைக்கேற்ப சிறப்பு ஆய்வுப் பணிகளும் ஆய்வுக் குழுக்களுக்கு அளிக்கப்படுகின்றன. மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தைச் சார்ந்த சில அலுவலகங்களில் விதிமீறல்கள் மற்றும் நிதி இழப்பு குறித்து ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை தாக்கல் செய்ய மதுரை மாவட்ட ஆய்வு குழுவிற்கு உத்தரவிடப்பட்டது. அதன்படி, அவர்கள் அந்த அலுவலகத்தை விரிவாக ஆய்வு செய்து, அந்த ஆய்வறிக்கை உரிய நடவடிக்கைக்காக கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறைக்கு அனுப்பப்பட்டது.

8(7) இதே போன்று, நெடுஞ்சாலைத் துறையிலுள்ள சில அலுவலகங்களால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்த பணிகளில் உரிய நெறிமுறைகள் பின்பற்றப்பட்டனவா என்பது தொடர்பாக ஆய்வு செய்ய சென்னை மாவட்ட ஆய்வுக் குழுவிற்கு உத்தரவிடப்பட்டது. அதன்படி பெறப்பட்ட ஆய்வறிக்கை தொடர் நடடிவடிக்கைக்காக நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறைக்கு மாற்றப்பட்டுள்ளது.

8(8) 2022–2023–ம் ஆண்டு, மார்ச் 2023 வரையில் மாவட்ட ஆய்வுக் குழுக்கள், தலைமைச் செயலக ஆய்வு அலுவலர்களுடன் இணைந்து, 36 முன்னோடிப் பயிற்சிகளும் குறுகிய காலப்பயிற்சிகளும் நடத்தியுள்ளன. மாவட்டங்களின் அனைத்து அரசுத் துறைகளில் பணியாற்றும் இளநிலை உதவியாளர் மற்றும் உதவியாளர்களுக்கு ஆண்டுதோறும் மாவட்டத் தலைமையகங்களில் மூன்று நாட்கள் புத்தாக்கப் பயிற்சியும் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்களால் வழங்கப்பட்டது.

8(9) தற்பொழுது, இப்பயிற்சிகளை இணைய வழியில் கற்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக ரூ.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தமிழ்நாடு மின் ஆளுமை முகமை அலுவலகம் மூலம் மென்பொருள் ஒன்று பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டு வருகிறது. இத்துடன் பாடத்திட்டங்களை இணைய வழி மூலம் கற்பிப்பதற்காக காணொலி தயாரிக்கப்பட்டு வருகிறது.

## 9. பயிற்சி

9(1) ஒவ்வொரு மனிதனும் அளவற்ற ஆற்றலுடன் பிறக்கிறான். பயிற்சியும், கடின உழைப்பும் அவனைச் சுய உணர்தலை அடையச் செய்கின்றன. முழுமையான மனிதனாக மலரச் செய்கின்றன.

பயிற்சிகள் ஒரு நபரின் தகுதியை மேம்படுத்துகின்றன, அர்ப்பணிப்பை அதிகப்படுத்துகின்றன, படைப்புத் திறனை உயர்த்துகின்றன, நிறுவனத்திற்கு அவன் பங்களிப்பைக் கூட்டுகின்றன. மேலாண்மை நிபுணர் டாம் பீட்டர்ஸ் என்பவர் 'திறன்மிகு மேலாளர்கள் தங்கள் பணி நேரத்தில் 75 சதவிகித நேரத்தை மற்றவர்களை உருவாக்குவதில் செலவழிக்கிறார்கள்' என்று குறிப்பிடுகிறார். உருவாக்குதல் என்பது அறிவைப் பரவலாக்கச் செய்யவும், தனியர்களின் வளர்ச்சியை அதிகப்படுத்தவும் மேற்கொள்ளும் உன்னதக் கலை.

திருக்குறள் 'ஒருவன் ஏதேனும் சில நல்லவற்றை உற்றுக்கவனித்து, ஆழ்ந்து சிந்தித்து, சில நல்ல கருத்துகளை உள்வாங்கினாலே அவை அவனுடைய கண்ணியத்தை அதிகப்படுத்தும்' என்று குறிப்பிடுகிறது.

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும் (திருக்குறள் 416)

மனிதவள மேலாண்மையின் முக்கியமான கூறுகளில் ஒன்று பயிற்சி. பயிற்சி என்ற பெயரைப் பொதுவாக நாம் பயன்படுத்தினாலும் பணியில் சேர்ந்ததும் அளிக்கப்படும் பயிற்சிக்கும், பின்னர் அளிக்கப்படுகின்ற மேம்பாட்டு நிகழ்வுகளுக்கும் அடிப்படையில் வேறுபாடு உள்ளது.

அடிப்படைப் பயிற்சி (Foundationial Training), அறிமுகப் பயிற்சி (Induction Training), புத்துணர்ச்சிப் பயிற்சி (Refresher Training), இடைக்காலப் பயிற்சி (Mid–Term Training), பணியிடைப் பயிற்சி (In–Service Training), பணியில் பயிற்சி (On The Job Training) என்று பல்வேறு விதமான பயிற்சிகள் இருக்கின்றன.

முறையான வகையில் அளிக்கப்படுகிற பயிற்சி, திறன்களை அதிகப்படுத்துகிறது, அறிவை விசாலப்படுத்துகிறது, மனநிலையை மாற்றுகிறது, பயிற்சி அளிப்பவர்களின் திறன், பயிற்சியின் பாடத்திட்டம், பயிற்சி பெறுபவர்களின் ஈடுபாடு, பயிற்சியின்போது பயன்படுத்துகிற உத்திகள், பயிற்சியில் பெற்றவற்றை களத்தில் பயன்படுத்தும் தன்மை ஆகியவற்றைப் பொருத்து ஒரு பயிற்சி வெற்றி பெறுகிறது.

மனிதவள மேலாண்மைத் துறை பல துறைகள் பயன்படுத்தத்தக்க விரிவான பயிற்சிக் கொள்கையைக் கொண்டு வந்திருக்கிறது. பல்வேறு துறைகள் மனிதவள மேலாண்மைத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற பயிற்சி அலகுகளைக் கொண்டு பணியாளர்களின் செயல்படும் அளவை அதிகரிக்கச் செய்கின்றன.

## 9(2) பயிற்சித் துறைத் தலைவர்

அரசின் பல்வேறு பிரிவு பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பின்வரும் நிறுவனங்கள் மனிதவள மேலாண்மைத் துறையின் கீழ் செயல்பட்டு வருகின்றன:–

1. அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி
2. அ மற்றும் ஆ அலுவலர்களுக்கான அடிப்படைப் பயிற்சி நிலையம்
3. அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்

தமிழ்நாட்டைச் சார்ந்த இளைஞர்கள் அரசுப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகளை எதிர்கொள்வதற்காக, பின்வரும் நிறுவனங்களில் உரிய பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன:–

4. அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையம், சென்னை
5. போட்டித் தேர்வுகள் பயிற்சி மையங்கள்

அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியின் இயக்குநரே பயிற்சித் துறைத் தலைவராகவும் செயல்படுகிறார். மேற்கண்ட அனைத்து நிறுவனங்களும் அவருடைய மேற்பார்வையில் வருகின்றன.

## 9(3) அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி

தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975–இன் கீழ் பதிவு செய்யப்பட்டு 1981–ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி படிப்படியாக வளர்ந்து, இன்று அரசுப் பணியாளர்கள் தங்கள் பணிகளைத் திறம்படச் செய்திட உதவும் வகையில் மேலாண்மை, செயல்திறன் பயிற்சிகளை அளித்து வருகிறது. பரவலாக்கத்தின் மூலம் மனித வளத்தின் திறன்களை அதிகரிக்கும் நோக்குடன் மதுரை, திருச்சி, சேலம் ஆகிய இடங்களில் 2014–ஆம் ஆண்டிலும், செங்கல்பட்டில் 2022–ஆம் ஆண்டிலும் மண்டலப் பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டன. மத்திய, மாநில அரசுப் பணியாளர்களின் திறன் கட்டுமானத்திற்காக ஒன்றிய அரசின் நிதி உதவியுடனும் அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டின் நிர்வாகப் பயிற்சி நிறுவனமாக (ATI) அறிவிக்கப்பட்டுள்ள அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி அதன் ஒருங்கிணைந்த

நிறுவனங்களான அ மற்றும் ஆ அலுவலர்களுக்கான அடிப்படைப் பயிற்சி நிலையம் மற்றும் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையம் ஆகியவற்றுடன் இணைந்து அரசு இயந்திரம் முழுவதற்கும் முழுமையான பயிற்சியினை அளித்து வருகிறது. மக்கள் நல அரசை நிறுவ வேண்டும் என்ற அரசின் குறிக்கோளை நிறைவேற்றும் வகையில் அதில் எதிர்கொள்ளும் சவால்களைச் சமாளிக்கும் விதத்தில் அரசு அலுவலர்களைத் தயார்படுத்துவதற்கு இந்தப் பயிற்சியில் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. பருவநிலை மாற்றம் போன்ற தற்கால சூழலுக்கேற்ற வகையில் பயிற்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு நடத்தப்படுவதோடு அரசுத் துறைகளிடமிருந்து குறிப்பிட்ட தலைப்பில் பயிற்சிகள் வேண்டுமென்ற கோரிக்கைகள் வந்தால் அவையும் நிறைவேற்றப்படுகின்றன. ஜனவரி 31, 2023 வரையிலான காலத்தில் அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி அதன் மண்டலப் பயிற்சி மையங்களோடு இணைந்து 650–க்கும் மேற்பட்ட பயிற்சிகளைக் கொடுத்துள்ளது. இதன் மூலம் 26,000 அரசு அலுவலர்கள் பயிற்சி பெற்றுள்ளார்கள். இதுவரையிலான ஆண்டுகளில் இதுவே அதிகமான எண்ணிக்கை ஆகும்.

<u>2022–2023 ல் நடைபெற்றுவரும் பயிற்சித் திட்டங்கள்</u>

தலைமைச் செயலகத்தில் பணிபுரியும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த சார்புச் செயலர்களுக்கு இரண்டு மாத கால கட்டாய வகுப்பறை பயிற்சிகள் மூன்று அணிகளில் நடத்தப்பட்டன.

<u>துறை சார்ந்த பயிற்சிகள்</u>

(i) முறையான பயிற்சி பெறாத தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், விடுதிக் காப்பாளர்கள் ஆகியோரை உள்ளடக்கிய அனைத்துத் துறை அலுவலர்களுக்கும் பயிற்சி கொடுப்பதற்காக மனிதவள மேலாண்மைத் (பயிற்சி 3) துறையின் 1.12.2021 நாளிட்ட அரசு ஆணை (டி) எண்.153 மூலம் இரண்டு கோடி ரூபாய் அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரிக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இதுவரை இந்த நிதி மூலம் ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுத் திட்டத்தில் பணிபுரிபவர்கள், சத்துணவு அமைப்பாளர்கள், வேளாண் விரிவாக்க மையப் பணியாளர்கள் ஆகியோருக்கு 28 அணிகளில் 849 அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

(ii) 55 வயதைக் கடந்த 'அ' மற்றும் 'ஆ' பிரிவு அலுவலர்களுக்கு வகுப்பறையில்லா சூழலில் அவர்களின் வயது, அனுபவத்திற்கேற்ற பொதுவான

தலைப்புகளில் பயிற்சிகள் அளிக்க வேண்டும் என்பதற்காக அரசு மனிதவள மேலாண்மைத் துறையின் 7.12.2021 நாளிட்ட அரசாணை (டி) எண்.157 மூலம் ரூ.1,79,80,000/– நிதியை ஒப்பளிப்பு செய்தது. அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி 1200 அரசு அலுவலர்களுக்கு 44 அணிகளில் இதற்கான பயிற்சியை மாமல்லபுரத்தில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமான விடுதி வளாகத்தில் நடத்தி முடித்துள்ளது.

(iii) மருத்துவர்கள், செவிலியர்கள், அமைச்சுப் பணியாளர்கள் ஆகியோருக்கு பயிற்சி அளிப்பதற்காக நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை தனது 30.6.2021 நாளிட்ட அரசாணை (நிலை) எண்.305–இன் மூலம் ரூ.3,02,40,000/– நிதியினை அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரிக்கு அளித்தது. இதன் மூலம் 1218 நபர்களுக்கு 39 அணிகளில் பயிற்சிகள் கொடுக்கப்பட்டன.

(iv) பிற்படுத்தப்பட்டோர், மிக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை தனது விடுதிக் காப்பாளர்களின் பயிற்சிக்காக 5.1.2022 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 1–இன் மூலம் ரூ.39.90 லட்சத்தினை அண்ணா நிர்வாகப் பணியாளர்

கல்லூரிக்கு ஒப்பளிப்பு செய்தது. இதுவரை 386 நபர்களுக்கு எட்டு அணிகளில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 965 அலுவலர்கள் இன்னமும் பயிற்றுவிக்கப்படவிருக்கிறார்கள்.

(v) கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை தனது அலுவலர்களுக்கு நுகர்வோர் விழிப்புணர்வில் பயிற்சி அளிப்பதற்காக 3.12.2021 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 118 மூலம் ரூ.20.00 லட்சத்தை அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரிக்கு ஒப்பளிப்பு செய்தது. 500 அலுவலர்களுக்கு 20 அணிகளில் பயிற்சிகள் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளன.

(vi) தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை 925 தொழில்நுட்ப அலுவலர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக ரூ.49.60 லட்சத்தை அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரிக்கு முன்பணமாகக் கொடுத்துள்ளது. இதன்மூலம் 502 அலுவலர்களுக்கு 17 அணிகளில் இதுவரை பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

<u>சிறப்பு பயிற்சித் திட்டங்கள்</u>

(i) அரசு அலுவலர்களுக்கான பயிற்சித் திட்டங்கள் மட்டுமல்லாமல் உயர்கல்விப் பயிலும் மாணவர்களுக்கான சிறப்பு பயிற்சிகளும் அளிக்கப்பட்டு

வருகின்றன. ராஷ்ட்ரிய உச்சாதார் சிஷ்யா அபியான் (RUSA) அமைப்பு மாணவர்களுக்கு உயர் கல்வியில் தொழிற்கல்வியைக் கற்றுத்தரும் திட்டத்தின்கீழ் அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரிக்கு அளித்த நிதியில் 2913 அரசுக் கல்லூரி மாணவர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

(ii) கலை–பண்பாட்டுத் துறை அளித்த நிதியின் மூலம் தமிழ்நாட்டில் உள்ள கவின் கலைக் கல்லூரிகள், இசைக் கல்லூரிகளின் பேராசிரியர்களுக்கு இரண்டு அணிகளில் பயிற்சிகள் கொடுக்கப்பட்டன.

(iii) மாமல்லபுரத்தில் நடைபெற்ற பன்னாட்டு சதுரங்கப் போட்டிகளைக் காண வந்த அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு உதவிடும் வகையில் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு 'சுற்றுலா நட்பு ஆட்டோ ஓட்டுநர்கள்' என்ற தலைப்பில் பயிற்சி அளிக்கப்பட்டது.

## 2023–2024 ஆம் ஆண்டிற்கான புதிய பயிற்சித் திட்டங்கள்

7.5.2022 அன்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்ததன் அடிப்படையில் மாவட்ட வருவாய் அலுவலர்கள், துணை ஆட்சியர்கள் நிலையில் உள்ள குடிமைப்பணி அலுவலர்களுக்குப் பயிற்சி

அளிப்பதற்காக மனிதவள மேலாண்மை (பயிற்சி–III) துறை தனது 18.11.2022 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 125 மூலம் பத்து லட்சம் ரூபாயை அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரிக்கு அளித்துள்ளது. இந்தப் பயிற்சிகள் 2023 பிப்ரவரி மாதத்தில் தொடங்கப்பட்டது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை தனது துறையின் 983 அலுவலர்களுக்கும் 'சமத்துவம் காண்போம்' என்ற தலைப்பில் பயிற்சியினை அளிப்பதற்காக நாற்பது லட்சம் ரூபாயை 7.12.2021 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 103–இன் மூலம் அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரிக்கு அளித்துள்ளது.

'நில எடுப்பு' என்ற தலைப்பில் சிறப்புப் பயிற்சி அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் நடத்தப்படுகிறது.

<u>அறிவிப்புகளின் மீதான நடவடிக்கை</u>

அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரிக்காக 13.9.2021 அன்று சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்ட பின்வரும் திட்டங்களின் நிலை:

(i) பணியாளர்களுக்கான கூடுதல் குடியிருப்புகள்

அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் பணிபுரியும் ஊழியர்களுக்காக, ஒவ்வொன்றும் 350 சதுர அடி பரப்பளவுள்ள ஆறு குடியிருப்புகள், மூன்று மாடிகளில், 2005–ஆம் ஆண்டு கட்டப்பட்டன. இவை அளவில் மிகச் சிறியவையாகும். தற்போது கல்லூரியில் நடத்தப்படும் பயிற்சி வகுப்புகளும், பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கையும் கணிசமாக அதிகரித்து விட்டன. கூடவே வெளியூர்களிலிருந்து வந்து தங்கி பயிற்சி பெறும் பயிற்சியாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து விட்டது. விடுதியில் தங்கும் இந்தப் பயிற்சியாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய இரவும் பகலும் உதவியாளர்கள் தேவைப்படுகிறார்கள். இதற்கு அவர்கள் கல்லூரி வளாகத்திற்குள்ளேயே தங்கியிருந்தால்தான் விடுதியில் தங்குபவர்களுக்கு நிறைவான வசதிகளைச் செய்து கொடுக்க முடியும். எனவே அத்தியாவசியமான கூடுதல் ஊழியர்களை வளாகத்திற்குள்ளேயே தங்க வைப்பதற்காக ரூ.3,48,02,047/– செலவில் எட்டு பணியாளர் குடியிருப்புகளைக் கட்ட திட்டமிடப்பட்டது. மனிதவள மேலாண்மை (பயிற்சி 3) துறை தனது 25–4–2022 நாளிட்ட அரசாணை எண் (டி) 67–இன் மூலம் இந்தத் தொகையைக் கல்லூரிக்கு ஒப்பளிப்பு செய்துள்ளது. ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

(ii) உயர் அழுத்த மின்சாரம் வழங்குதல்

கூடுதலாகக் கட்டப்பட்ட வகுப்பறைகள் மற்றும் விடுதிகள், அதிக அளவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தொழில்நுட்ப சாதனங்கள், கூடுதல் செயல்பாடுகள், அதிக அளவிலான பயிற்சி வகுப்புகள் மற்றும் அதிகரித்துவரும் பயிற்சியாளர்கள் எண்ணிக்கை போன்றவற்றால் கல்லூரியின் மின் உபயோகம் தற்போது பன்மடங்கு அதிகரித்துள்ளது. தற்போதைய மற்றும் எதிர்காலத் தேவைகளைக் கருத்தில் கொண்டு அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரிக்கு உயர் மின்அழுத்த மின்சார இணைப்பைப் பெற்றுக் கொள்வது என்று திட்டமிடப்பட்டது. ரூ.3,50,00,000 செலவிலான இந்தத் திட்டத்தில் 500 கிலோ மின்பேரலகு திறனுடைய இரண்டு மின்மாற்றிகளையும், 250 கிலோ மின்பேரலகு திறன்கொண்ட மின்னாக்கி ஒன்றையும், தானியங்கி முதன்மைக் கட்டுப்பாட்டுக் கருவியுடன் (AMF) கூடிய 500 கிலோ மின்பேரலகு கொண்ட மின்னாக்கி ஒன்றையும் நிறுவ முடிவு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

(iii) உள்ளரங்கு படப்பிடிப்புத் தளம்

அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் நேரடி பயிற்சி வகுப்புகள் மட்டுமின்றி, பெரிய வகுப்பறைகளில் இடம், மின்சாரம், தளவாடங்கள் ஆகியவற்றின்

பயன்பாட்டினை குறைக்கும் நோக்குடன், புதிய முயற்சியாக, காணொலிப்பாதை வழியாக பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டது.

தற்போது மேற்படி கல்லூரியில் இணைய வழி வகுப்புகள் காணொலி காட்சி அறையில் நடத்தப்பட்டு வருகின்றன. வருங்காலங்களில் இக்கல்லூரியின் செயல்பாட்டினை அதிகரிக்கச்செய்து கூடுதல் எண்ணிக்கையிலான நபர்களுக்கு இணைய வழி பயிற்சி அளிக்கும் திட்டத்தை விரிவுப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. மேலும் தற்காலத்திலுள்ள பணியாளர்கள் மின்னணு சார்ந்த சாதனங்களை சிறப்பாக பயன்படுத்துகின்ற நிலையில், நேரடி வகுப்புகளுக்கு பதிலாக, அவர்களே இணையவழி வகுப்புகளையே பெரிதும் விரும்புகின்றனர்.

எனவே மேற்படி கல்லூரியில் பிரத்தியேக உள்ளரங்கு (Indoor Studio) ஒன்றினை அமைப்பதற்காக மனிதவள மேலாண்மை (பயிற்சி-3) துறை தனது 5-4-2022 நாளிட்ட அரசாணை (டி) எண் 58-இல் ரூ.49,89,814/-ஐ வழங்கியுள்ளது.

<u>(iv) அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியின் காணொலிப்பாதை - AIM TN</u>

அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி 2021-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் 'AIM TN' என்ற

காணொலிப்பாதையை அறிமுகப்படுத்தியது. ஆரம்ப காலத்தில் இந்த காணொலிப்பாதையில் வழக்கு மேலாண்மை, தகவல் பெறும் உரிமை சட்டம் போன்ற பயிற்சிசார் காணொலிகள் மட்டுமே பதிவேற்றம் செய்யப்பட்டன. கொரோனா பெருந்தொற்று தீவிரமடைந்திருந்த காலத்தில் இந்த பயிற்சிக் காணொலிகள் அரசு ஊழியர்களுக்கு அருமருந்தாய் இருந்தன.

போட்டித் தேர்வுகளை எழுதுவதற்குப் பயிற்றுவிக்க இலவசப் பயிற்சி நிலையங்கள் இல்லாத சூழலில் கிராமப்புறங்களில் வாழும் மாணவர்களுக்கும், பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கும் இத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்று அரசுப் பணியில் சேருவது என்பது கனவாக இருந்து வருகிறது. இதுபோன்ற மாணவர்களுக்கு உதவிடும் வகையில் அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி தனது AIM TN காணொலிப்பாதையில் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சிக் காணொலிகளைத் தயாரித்து பதிவேற்றம் செய்யத் திட்டமிட்டது. முதல் முயற்சியாக அது நவம்பர் 2022-இல் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தால் நடத்தப்பட்ட காவலர் தேர்விற்கான காணொலிகளைத் தயாரித்து பதிவேற்றம் செய்தது. இதற்குக் கிடைத்த பெரும் வரவேற்பின் காரணமாக,

போட்டித் தேர்வுகளுக்கென பிரத்தியேக இணையவழி வகுப்புகளை நடத்துவதற்கென அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரிக்கு அரசு ஒரு கோடி ரூபாய் நிதியினை அளித்தது.

இந்த நிதியினைக்கொண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய தொகுதி 2/2A தேர்வை எழுதும் மாணவர்களுக்கு 2023–ஆம் ஆண்டு ஜனவரி–பிப்ரவரி மாதங்களில் 100 காணொலிகள் பதிவேற்றம் செய்யப்பட்டு இணையதள வகுப்புகள் நடத்தப்பட்டன. இதன் சிறப்பம்சமாக மொத்தம் 18 மாதிரித் தேர்வுகள் நடத்தப்பட்டு 5,000 மாணவர்கள் இத்தேர்வினை எழுதினர். அவர்கள் அனைவரின் விடைத்தாள்களும் மதிப்பீடு செய்யப்பட்டு எழுதிய மாணவர்களுக்குத் திருப்பி அனுப்பப்பட்டன. தற்போது மத்திய அரசின் தேர்வாணையம் (SSC) நடத்தும் பன்முகத்திறன் பணியாளர் (Multi Tasking Staff) தேர்விற்கான காணொலிகள் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன. அதன் முழு பாடத்திட்டத்தையும் 60 நாட்களுக்குள் முடிக்கும் வகையில், இந்தப் பயிற்சியில் தோராயமாக 180 மணி நேரம் கொண்ட 180 காணொலிகள் பதிவேற்றம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. AIM TN என்ற அண்ணா நிர்வாகப் பணியாளர்

கல்லூரியின் இந்தக் காணொலிப்பாதையில் 1.18 லட்சம் நபர்கள் பதிவு செய்துள்ளனர். இதுவரை மொத்தம் 672 காணொலிகள் பதிவேற்றப்பட்டுள்ளன. 56 லட்சம் பேர் காணொலிகளைப் பார்த்துள்ளனர்.

(v) நோக்கம் செயலி

அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி போட்டித் தேர்வுகளுக்கென பிரத்தியேகமாக செயலி ஒன்றையும் அறிமுகப்படுத்தியுள்ளது. 'நோக்கம்' என்று பெயரிடப்பட்ட இந்தச் செயலியில் சுமார் 65,000 நபர்கள் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்துள்ளனர். மத்திய அரசின் தேர்வாணையம் நடத்தும் பன்முகத்திறன் பணியாளர் (MTS) தேர்விற்கான மாதிரித் தேர்வுகள் தற்போது இதில் பதிவேற்றப்பட்டு வருகின்றன. ஒரு மாத காலத்தில், 15 தேர்வுகள் நடத்தப்பட்டுவிட்டன; 25,000 தேர்வர்கள் இந்த மாதிரித் தேர்வுகளை எழுதியுள்ளனர்.

(vi) அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையத்தின் காணொலிப்பாதை – AICSCC TN

அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையத்தின் காணொலிப்பாதையான AICSCC TN செப்டம்பர் 29, 2020 அன்று தொடங்கப்பட்டது. தமிழ்நாட்டினர் அதிக அளவில் குடிமைப் பணிகளில்

சேர வேண்டும் என்ற நோக்குடன் இந்த காணொலிப்பாதை வல்லுநர்கள், அதிகாரிகள், கல்வியாளர்களைக் கொண்டு முதல்நிலை மற்றும் முதன்மைத் தேர்வுகளுக்கான பயிற்சிக் காணொலிகளைத் தயாரித்து பதிவேற்றி வருகிறது. இந்தக் காணொலிகளுக்கு மத்திய தேர்வாணைய (UPSC) தேர்வினை எழுதும் மாணவர்களிடமிருந்து நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. இதுவரை 74,394 வாடிக்கையாளர்கள் இந்தக் காணொலிப்பாதையில் பதிவு செய்துள்ளனர். 1,500 காணொலிகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. 23 லட்சம் பேர் காணொலிகளைப் பார்த்துள்ளனர்.

### 9(4) அ மற்றும் ஆ பிரிவு அடிப்படை பயிற்சி நிலையம்

'அ' மற்றும் 'ஆ' பிரிவு அடிப்படை பயிற்சி நிலையம், தொன்மை வாய்ந்த 'காஞ்சி' கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சி நிலையம் பயிற்சித் துறை தலைவரின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் மாவட்ட வருவாய் அலுவலரால் நிர்வகிக்கப்படுகிறது.

இப்பயிற்சி நிலையத்தில் நேரிடையாகவும், பதவி உயர்வின் மூலமாகவும் பணியமர்த்தப்பட்ட பல்வேறு துறைகளைச் சார்ந்த 'அ' மற்றும் 'ஆ' பிரிவு அலுவலர்களுக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

அரசாணை (நிலை) எண்.5, மனித வள மேலாண்மைத் துறை, நாள் 13.01.2022ன்படி பயிற்சிக்கான பாடத்திட்டம், பயிற்சி முறை ஆகியவை மாற்றியமைக்கப்பட்டு, 'அ' பிரிவு அலுவலர்களின் அடிப்படை பயிற்சிக்காலம் 150 மணி நேரத்திலிருந்து 180 மணி நேரமாகவும், ஆ பிரிவு அலுவலர்களின் அடிப்படை பயிற்சிக்காலம் 90 மணி நேரத்திலிருந்து 120 மணி நேரமாகவும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. மேலும், இந்தப் பயிற்சித் திட்டத்தில் யோகா, களப் பார்வையிடல் ஆகியன சேர்க்கப்பட்டு அரசாணை (நிலை) எண்.136, மனித வள மேலாண்மைத் (பயிற்சி–1) துறை, நாள் 20.12.2022–ன்படி, திருத்தம் வெளியிடப்பட்டது.

மாற்றியமைக்கப்பட்ட பாடத்திட்டத்தின்படி, பயிற்சியில், 'அ' பிரிவு அலுவலர்களுக்கு அலுவலக நிர்வாகம், நிதி நிர்வாகம், சட்டம், பொது நிதி, பொது நிர்வாகம், மேலாண்மை கோட்பாடுகள், திட்டம் மற்றும் மேம்பாடு, பொருளதாரம், கணினி அறிவியல் ஆகிய பாடங்களில் ஆறு வாரங்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

'ஆ' பிரிவு அலுவலர்களுக்கான பயிற்சியில் சட்டம், அலுவலக நிர்வாகம், நிதி நிர்வாகம், பொது நிர்வாகம், மேலாண்மை கோட்பாடுகள், கணினி அறிவியல் ஆகிய பாடங்களில் நான்கு வாரங்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

இப்பயிற்சியின் நிறைவாக அலுவலக நிர்வாகம், நிதி நிர்வாகம், சட்டம் ஆகிய பாடங்களில் தேர்வு ஒன்று நடத்தப்படும். இத்தேர்வில் தேர்ச்சி பெறுவது பயிற்சியாளரின் தகுதிகாண் பருவத்தை நிறைவு செய்வதற்கு இன்றியமையாததாகும்.

பயிற்சியில் ஈடுபடுத்தப்படும் கௌரவ விரிவுரையாளர்களுக்கு வழங்கப்படும் மதிப்பூதியத்தினை உரிய காலத்தில் வழங்கிட ஏதுவாக, அரசாணை (நிலை) எண். 126, மனிதவள மேலாண்மைத் (பயிற்சி-1) துறை, நாள்: 21.11.2022 இல் தற்காலிக முன்பணத் தொகை ரூ.50,000/- லிருந்து ரூ.2,00,000/- ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டது.

2022-2023 ஆம் நிதி ஆண்டில், 153 'அ' பிரிவு அலுவலர்களுக்கும், 235 'ஆ' பிரிவு அலுவலர்களுக்கும் என மொத்தம் 388 அலுவலர்களுக்கு இந்நிலையித்தில் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

**9(5) அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்**

அரசு அலுவலர் பயிற்சி நிலையம் ஈரோடு மாவட்டத்தில் உள்ள பவானிசாகரில் 1974-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. சத்தியமங்கலம் புலிகள் சரணாலயத்தின் அருகில் 71.32 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இந்தப் பயிற்சி நிலையத்தில் அரசு அலுவலர்களுக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

பயிற்சி பெறும் அலுவலர்கள் இனிமையான சூழலினால் அமைதியும் ஆற்றலும் ஒருங்கே கிடைக்கப்பெற்று மகிழ்ச்சியான மனஎழுச்சியுடன் பயிற்சி வகுப்புகளில் முழுமனதுடன் பங்கேற்கிறார்கள். இந்தப் பயிற்சியானது உறைவிடப் பயிற்சி என்பதால் பயிற்சி பெறுபவர்கள் தங்கள் தனித் திறமைகளை வளர்த்துக்கொள்ளும் வகையில் மாலை வேளைகளில் கல்விசாரா பயிற்சிகளில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு ஆளுமையை மேம்படுத்திக் கொள்ள ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது.

இந்த மையம் தமிழ்நாடு அரசின் அமைச்சுப் பணி மற்றும் நீதித் துறை அமைச்சுப் பணிகளில் நேரடியாகப் பணியமர்த்தப்பட்ட அலுவலர்களுக்கும், பதவி உயர்வு மூலம் இளநிலை உதவியாளர், உதவியாளர் பணிகளில் அமர்த்தப்பட்ட அலுவலர்களுக்கும் அடிப்படைப் பயிற்சியினை அளித்து வருகிறது.

பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் அடிப்படைப் பயிற்சியை அளிப்பதில் நிலவிய தேக்கத்தைக் குறைப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த அறிவிப்பின் அடிப்படையில் புதியதாக நியமிக்கப்பட்ட மற்றும் பதவி உயர்வு பெற்ற இளநிலை உதவியாளர் மற்றும் உதவியாளர்களுக்கு அவர்கள் பணிபுரியும் அந்தந்த

மாவட்டத்திலேயே இந்தப் பயிற்சிகளை வழங்கவும், குறித்த காலத்தில் தங்கள் தகுதிகாண் பருவத்தை எந்தவிதத் தாமதமும் இல்லாமல் நிறைவு செய்திடவும் ஏதுவாக பரவலாக்கப்பட்ட பயிற்சியை வழங்க 25.10.2021 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதன் காரணமாக 9200 அலுவலர்களுக்கு 2022-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பயிற்சி அளிக்கப்பட்டு முன்னர் இருந்த தேக்க நிலை நீக்கப்பட்டது.

அரசாணை (1டி) எண் 516, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 08.08.2022-ன்படி துணை வட்டாட்சியர் பணியிடைப் பயிற்சிக்கான பாடத்திட்டம் குறைக்கப்பட்டு பயிற்சி அட்டவணை மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி உரிய காலத்தில் தொடங்கப்படும்.

ரூ.504 லட்சம் செலவில் அமைக்கப்பட்ட பல்நோக்கு அரங்கம், உணவகம், மழை நீர் சுத்திகரிப்புத் தொட்டி, சமையல் எரிவாயுக் கிடங்கு, துணி துவைக்கும் இடம் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டு 11.7.2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் காணொலி வாயிலாகத் திறந்து வைக்கப்பட்டு பயிற்சி பெறுபவர்களின் பயன்பாட்டுக்கு வந்துள்ளது.

அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் பெற்றுள்ள இம்மையத்தில் 700 அலுவலர்கள் ஒரே நேரத்தில் பயிற்சி பெற முடியும்.

ரூ.10 கோடி செலவில் கட்டப்பட்ட இரண்டு விடுதிகளையும், நான்கு வகுப்பறைகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 11.7.2022 அன்று காணொலி வாயிலாகத் திறந்து வைக்கப்பட்டு பயிற்சி பெறுபவர்களின் பயன்பாட்டுக்கு வந்துள்ளது.

இப்பயிற்சி மையத்திற்குரிய 18 ஏக்கர் காலி நிலத்தை சமூகக் காடு வளர்ப்பு திட்டத்தின் கீழ் காடுமயமாக்குதலுக்கு மனிதவள மேலாண்மைத் துறை 27.8.2022 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 96–இன் மூலம் ரூ.27 லட்சம் வழங்கியுள்ளது.

தொடங்கப்பட்ட நாளிலிருந்து பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி மையம் அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த 1,42,220 அலுவலர்களுக்குப் பயிற்சியினை வழங்கியுள்ளது.

**9(6) அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையம்**

பட்டியலின / பழங்குடி இனத்தைச் சார்ந்த மாணவர்களை குடிமைப் பணி தேர்வுகளை எழுதுவதற்குப் பயிற்றுவிக்க முன்–தேர்வு பயிற்சி மையம் 1966–ஆம் ஆண்டு நிறுவப்பட்டது, 1971–ஆம்

ஆண்டு பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினரின் வழிகாட்டுதலுக்காக சிறப்புப் பயிற்சி மையம் ஒன்று நிறுவப்பட்டது. பின்னர் இந்த இரண்டு நிறுவனங்களும் "அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையம்" என்ற பெயரில் ஒன்றிணைக்கப்பட்டன. முதல்வர் ஒருவரால் நிர்வகிக்கப்படும் இந்த பயிற்சி மையம் பிப்ரவரி 2000 ஆண்டு முதல் அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி இயக்குநர் மற்றும் பயிற்சித் துறைத் தலைவரின் கீழ் இயங்கி வருகிறது.

மாணவர்கள் தங்களுடைய குறிக்கோளினை அடைவதற்கு உரிய படிக்கும் வசதியை மேற்கொள்ள இந்த மையம் அமைதியான சூழலில் அமைந்துள்ளது. போதுமான அளவு வகுப்பறைகள், பெரிய உள்ளரங்கம், நன்முறையில் அமையப்பெற்ற நூலகம், வசதியான விடுதி அறைகள், சமச்சீரான உணவளிக்கும் உணவகம் ஆகிய அனைத்து வசதிகளையும் கொண்டுள்ளதால் அனைவராலும் போற்றப்படுகின்ற பயிற்சி மையமாக இம்மையம் விளங்குகின்றது. தூய்மைப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அறிஞர் பெருமக்களும், அரசு உயர் அதிகாரிகளும் வகுப்பெடுக்கும் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இளைஞர்கள் போட்டித் தேர்வுகளை திறமையாக எதிர்கொள்ள, அடிக்கடி மாதிரித் தேர்வுகள் நடத்தப்படுகின்றன.

## குடிமைப் பணி தேர்வுகள்

மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் குடிமைப் பணி தேர்வுகளை மூன்று நிலைகளில் நடத்துகிறது. மாணவர்கள் முதன்மைத் தேர்வினை எதிர்கொள்ளும் அளவிற்குத் தகுதி பெற்றிருக்கிறார்களா என்பதைச் சோதிக்கும் முதல்நிலைத் தேர்வு நடத்தப்படுகிறது. முதன்மைத் தேர்வில் வெற்றி பெற்றவர்களை தேர்வாணையம் புது தில்லியில் நடைபெறும் ஆளுமைத் தேர்வில் கலந்துகொள்ள அழைக்கிறது. முதன்மைத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களும், ஆளுமைத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களும் கூட்டப்பட்டு இறுதி தர வரிசை நிர்ணயிக்கப்படுகிறது.

## முதல்நிலைத் தேர்வுக்கான பயிற்சி

அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையம், UPSC முதல்நிலைத் தேர்வுக்குப் பயிற்சி அளிப்பதற்காக தகுதி வாய்ந்த 325 நபர்களை (225 நபர்கள் உள்ளுறை வசதியுடன், 100 நபர்கள் உள்ளுறை வசதி இன்றி) நுழைவுத் தேர்வின் மூலம் தேர்வு செய்கிறது. நுழைவுத் தேர்விற்கான விளம்பரம் தமிழ் மற்றும் ஆங்கிலச் செய்தித்தாள்களிலும், மையத்தின் இணையதளத்திலும் www.civilservicecoaching.com நவம்பர் / டிசம்பர் மாதத்தில் வெளியிடப்படும். நுழைவுத் தேர்வில் பெறப்படும்

மதிப்பெண்களின் அடிப்படையில் மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள். மனித வள மேலாண்மைத் துறையின் 11.1.2022 நாளிட்ட அரசாணை (நிலை) எண்.4–இல் ஆணையிடப்பட்டவாறு இப்பயிற்சி மையத்தில் சேருவதற்கான வழிமுறைகள் பின்பற்றப்படுகிறது. முதல்நிலைத் தேர்வினை எதிர்கொள்வதற்காக இப்பயிற்சி மையம் 6 மாத கால பயிற்சி (டிசம்பர் முதல் மே வரை) அளிக்கிறது. நடப்பு ஆண்டில் நுழைவுத் தேர்விற்கு 7077 online விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அதில் 325 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு 9.12.2022 முதல் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

<u>முதன்மைத் தேர்வுக்கான பயிற்சி</u>

ஒவ்வோர் ஆண்டும் முதல்நிலைத் தேர்வில் வெற்றி பெறும் 225 மாணவர்களுக்கு முதன்மைத் தேர்வினை எதிர்கொள்வதற்கான மூன்று மாத பயிற்சி (ஜூலை முதல் செப்டம்பர் வரை) வழங்கப்படுகிறது. அகில இந்திய குடிமைப் பணி பயிற்சி மையத்தில் பயின்று முதல்நிலைத் தேர்வில் வெற்றி பெற்றோர் மட்டும் இல்லாமல், மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்து வரும் மாணவர்களும் இந்த முதன்மைத் தேர்வுப் பயிற்சிக்காக சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். வருமான

உச்சவரம்பைக் கருத்தில் கொள்ளாமல் அனைத்து 225 மாணவர்களுக்கும் பயிற்சி புத்தகங்களை பயன்படுத்திக் கொள்வதற்காக மாதமொன்றிற்கு ரூ.3,000/– என்ற அளவில் மூன்று மாதங்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

<u>மாதிரி ஆளுமைத் தேர்வு</u>

அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையம் முதன்மைத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்காக மாதிரி ஆளுமைத் தேர்வை நடத்துகிறது. புது தில்லியில் நடைபெறும் ஆளுமைத் தேர்வினை மாணவர்கள் மனஉறுதியுடன் எதிர்கொள்வதற்காக, பணியிலிருக்கும் மற்றும் பணியிலிருந்து ஓய்வு பெற்ற அகில இந்திய குடிமைப் பணி அதிகாரிகளைக் கொண்டு, மாதிரி ஆளுமைத் தேர்வு மற்றும் மாதிரி நேர்முகத் தேர்வும் நடத்தப்படுகிறது. ஆளுமைத் தேர்வினை மன அழுத்தமின்றி எதிர்கொள்ள ஏதுவாக புது தில்லி செல்லும் மாணவர்களுக்கு தமிழக அரசு நாளொன்றுக்கு நூறு ரூபாய் என்ற அளவில் பத்து நாட்களுக்கு சலுகை விலையில் தங்கும் அறைகளையும், உணவினையும் தமிழ்நாடு இல்லத்தில் வழங்குகிறது. இடைநிகழ்வுச் செலவிற்காக

வழங்கப்பட்ட ரூ.2,000/- மனிதவள மேலாண்மை (பயிற்சி-1) துறையின் 8.7.2022 நாளிட்ட அரசாணை எண்.68 மூலம் ரூ.5,000/- ஆக உயர்த்தப்பட்டது.

இந்த மையத்தை முதல்வர் ஒருவரும், முழுநேர பேராசிரியர் ஒருவரும் நிர்வகிக்கின்றனர். 23-க்கும் மேற்பட்ட தலைப்புகளில் பயிற்சி அளிப்பதற்காக 20 கௌரவப் பேராசிரியர்களும் பணி புரிகிறார்கள். 25.11.2021ம் நாளிட்ட மனித வள மேலாண்மைத் (பயிற்சி-1) துறையின் அரசாணை நிலை எண்.131ன் படி கௌரவப் பேராசிரியர்களின் மதிப்பூதியம் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

முதல்நிலைத் தேர்வு மற்றும் முதன்மைத் தேர்வினை எழுதும் மாணவர்களுக்கான புவியியல் புத்தகத்தின் முதல் தொகுதி 28.3.2023 அன்று வெளியிடப்பட்டது.

அகில இந்தியக் குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையத்தில் கூடுதல் உணவுக்கூடம், சமையலறை, மேல்தளம் மற்றும் தீயணைப்பு அமைப்பு, மிடுக்கு வகுப்பறைகளை மேம்படுத்துதல் ஆகிய கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்ள அரசாணை (நிலை) எண்.71, மனித வள மேலாண்மைத் (பயிற்சி-1) துறை, நாள் 15.07.2022-ன்படி ரூ.1,17,96,383/- ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2011–ம் ஆண்டிலிருந்து இப்பயிற்சி மையத்தில் பயின்ற 434 ஆர்வலர்கள் அகில இந்திய குடிமைப் பணிகளுக்கான தேர்வுகளில் வெற்றிபெற்றுள்ளனர்.

## மதுரை மற்றும் கோயம்புத்தூரில் உள்ள அண்ணா நூற்றாண்டு குடிமைப் பணிகள் பயிற்சி மையங்கள்

கிராமப்புறங்களிலிருந்து இந்திய ஆட்சிப்பணி மற்றும் இந்திய காவல் பணி ஆகியவற்றிற்கான தேர்வுகளை எழுதும் மாணவர்கள் பயனடையும் வகையில், சென்னையில் உள்ள அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையத்தைப் போன்று மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்திலும், கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்திலும் அண்ணா நூற்றாண்டு குடிமைப் பணிகள் பயிற்சி நிலையம் என்ற பெயரில் மேலும் இரண்டு பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு குடிமைப் பணிகளின் முதல்நிலைத் தேர்வுகளுக்கு மட்டும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. 2023–ஆம் ஆண்டு முதல்நிலைத் தேர்வுக்காக மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் 95 நபர்களும், கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்தில் 100 நபர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## 9(7) போட்டித் தேர்வு பயிற்சி மையங்கள்

வட சென்னையில் ரூ.1.53 கோடி நிதி ஒதுக்கீட்டில் புதிய போட்டித் தேர்வு பயிற்சி மையம் உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து, கோயம்புத்தூர், மதுரை மற்றும் சேலம் ஆகிய மூன்று இடங்களிலும், சென்னையில் மற்றும் ஓர் இடத்திலும் ரூ.4,44,20,000/- நிதி மதிப்பீட்டில் போட்டித் தேர்வு பயிற்சி மையங்கள் தொடங்குவதற்கு ஆணை வழங்கப்பட்டது. இத்தகைய பயிற்சி மையங்கள் மாணவர்கள் மத்திய பணியாளர் தேர்வாணையம், ரயில்வே தேர்வு வாரியம், வங்கிப் பணியாளர் தேர்வு நிலையம், தமிழ்நாடு அரசுத் தேர்வாணையம் போன்ற முகமைகள் நடத்தும் வேலை வாய்ப்புகளுக்கான போட்டித் தேர்வுகளை திறம்பட எதிர்கொண்டு வெற்றிகாண வழிவகை செய்கின்றன.

சென்னை, நந்தனத்தில் உள்ள அரசினர் ஆடவர் கலைக்கல்லூரியில் போட்டித் தேர்வுகள் பயிற்சி மையம் 23.05.2022 முதல் செயல்பட்டு வருகிறது. கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் போட்டித் தேர்வுகள் பயிற்சி மையம் ஒன்று 07.03.2023 அன்று தலைமைச் செயலாளர் / பயிற்சித் துறைத் தலைவர் அவர்களால் தொடங்கப்பட்டுள்ளது. மேலும், மதுரை, சேலம் ஆகிய இடங்களிலும் போட்டித் தேர்வுகள் பயிற்சி மையம் தொடங்குவதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 24.07.2022 அன்று நடத்தப்பட்ட தொகுதி IV எழுத்துத் தேர்வுக்கான பயிற்சி வகுப்புகள், சென்னை, பழைய வண்ணாரப்பேட்டையில் உள்ள சர் தியாகராயா கல்லூரி மற்றும் நந்தனம் ஆடவர் கலைக் கல்லூரியில் செயல்பட்டு வரும் பயிற்சி மையங்களில் அனுபவம் வாய்ந்த கௌரவ விரிவுரையாளர்கள் வாயிலாக நடத்தப்பட்டு அதன்மூலம் 440 ஆர்வலர்கள் பயனடைந்துள்ளனர்.

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் இரண்டாம் நிலை காவலர், இரண்டாம் நிலை சிறைக் காவலர், தீயணைப்பாளர் ஆகிய பதவிகளுக்கு 27.11.2022 அன்று நடத்திய எழுத்துத் தேர்வுக்கு இவ்விரண்டு போட்டித் தேர்வு மையங்களின் மூலம் 165 ஆர்வலர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன. 17 ஆர்வலர்கள் எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெற்று உடற்தகுதித் தேர்வுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், 18.12.2022 அன்று நடத்திய தொகுதி V–A (தமிழ்நாடு தலைமைச் செயலகப்பணி) எழுத்துத் தேர்வுக்கு இவ்விரண்டு போட்டித் தேர்வுகள் பயிற்சி மையங்களில் அனுபவம் வாய்ந்த ஓய்வு பெற்ற / பணியில் உள்ள தலைமைச் செயலக மூத்த அலுவலர்களைக்கொண்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு 290 தேர்வர்கள் பயனடைந்துள்ளனர்.

## 9(8) தலைமைச் செயலகப் பயிற்சி நிலையம்

- தலைமைச் செயலக பயிற்சி நிலையம், மனித வள மேலாண்மைத் துறையின்கீழ் இயங்குகின்றது.
- இப்பயிற்சி நிலையத்தில் நேரடி நியமனம் மூலம் தலைமைச் செயலகத் துறைகளில் பணியமர்த்தப்பட்ட உதவிப் பிரிவு அலுவலர்கள், நேர்முக உதவியாளர்கள், உதவியாளர்கள் மற்றும் தட்டச்சர்களுக்கு அடிப்படைப் பயிற்சியானது வழங்கப்பட்டு வருகின்றது. இப்பயிற்சி நிலையமானது இதுவரை 105 அணிகளுக்கு அடிப்படைப் பயிற்சியினை வழங்கியுள்ளது.
- நடைமுறையிலுள்ள தலைமைச் செயலகப் பணியாளர்களுக்கான அடிப்படைப் பயிற்சியானது பயனுள்ள சேவையை வழங்குவதற்கு ஏதுவாக சீரமைக்கப்பட்டு, புதிதாக பணி நியமனம் செய்யப்படும் பணியாளர்களை தயார்படுத்தும் விதத்தில், மிகவும் பொருத்தமான மற்றும் பணிசார்ந்த பாடத்திட்டங்கள் இணைக்கப்பட்டுள்ளது.

## 10. புதிய முயற்சிகள்

### 10(1) விதி ஆய்வு குழு

சமீபத்திய தொழில்நுட்பம் மற்றும் மேம்படுத்தப்பட்ட கல்வித் தரங்களின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, பணியாளர் தெரிவு மற்றும் பதவி உயர்வுக்கான தகுதிகள் வரையறுக்கப்பட வேண்டும். எனவே, நேரடி தேர்வு மற்றும் பதவி உயர்வு நியமனங்களில் பணியாளர் தெரிவுக்கு பரிந்துரைக்கப்பட்ட தகுதிகளை நவீனமயமாக்குவது தொடர்பாக, சிறப்பு விதிகளை ஒழுங்குபடுத்தவும், சீரமைக்கவும், ஓய்வு பெற்ற அரசு அதிகாரிகளைக் கொண்ட பிரத்யேகக் குழு அமைக்கப்பட்டுள்ளது. விதிகளை மேம்படுத்தும் பணியானது, அவ்விதி சார்ந்த துறைகளின் ஆலோசனையுடன் நடைபெற்று வருகிறது.

### 10(2) மின்னணு அலுவலக முறை (e–Office System)

வெளிப்படைத்தன்மை, துரிதமான செயல்பாடு ஆகியவற்றினை ஊக்குவிக்கும் வகையில் மின்னணு ஆளுகை மூலம் அரசு நிருவாகத்தினை திறம்பட கண்காணிக்கும் வகையில் மின்னணு – அலுவலக முறை (e–Office System) அறிமுகப்படுத்தப்பட்டு 21.03.2022 முதல் இத்துறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

10(3) பயிற்சி அலகு

பொது நிர்வாகம், தலைமைச் செயலக நிர்வாகம், பணி சார்ந்த (சட்டம் / விதிகள்) நிர்வாகம், நேர்மையான நிர்வாகம் / ஒழுக்கம் / நடத்தை ஆகியவற்றில் தலைமைச் செயலக பணியாளர்களின் செயல்திறனை மேம்படுத்துவதற்காக மனித வள மேலாண்மைத் துறையில் ஒரு பயிற்சி அலகு உருவாக்கப்பட்டுள்ளது.


## 11. முடிவுரை


பொது மக்களுக்கு சிறந்த சேவையை வழங்கும் வகையில், அரசின் மனித வளம் மூலம் சிறந்த நிர்வாகத்தை மேற்கொள்வதற்காக, பணி நெறிமுறைகளைப் செயல்படுத்துவதே இத்துறையின் முதன்மையான குறிக்கோளாகும்.

**முனைவர். பழனிவேல் தியாக ராஜன்**

நிதி மற்றும் மனித வள
மேலாண்மைத் துறை அமைச்சர்.

ஒருங்கிணைந்த மாநிலப் பணிகள் மற்றும் சார்நிலைப் பணிகளில் (நேர்முகத் தேர்வுகளில்) 2022 முதல் 2023 வரை அறிவிக்கப்பட்ட காலிப்பணியிடங்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்டவர்கள்




ஒருங்கிணைந்த சார்நிலைப் பணிகளில் 2022 முதல் வரை நேர்முகத் தேர்வு அல்லாத
பதவிகளில் தெரிவு செய்யப்பட்டவர்களின் பாலின விகிதாச்சாரம்
ஆண்கள்
பெண்கள்
பிறர்
100%
90%
80%
70%
60%
50%
40%
30%
20%
10%
0%
11
141
205
76
105
1
5
8
1
1
93
102
16
14
282
603
118
153
14
36
உதவி தோட்டக்கலை அலுவலர்
இளநிலை வரைவு அலுவலர், பொ.ப.து.
இளநிலை வரைவு அலுவலர், நெ.து.
இளநிலை தொழில்நுட்ப உதவியாளர், கைத்தறித் துறை
இளநிலை பொறியாளர், மீன்வளத் துறை
உதவி புள்ளியியலாளர்
வட்டார சுகாதார புள்ளியியலாளர்
கணக்கீட்டாளர் மற்றும் தடுப்பூசிப் பண்டகப் பொறுப்பாளர்
நில அளவர்
வரைவாளர்
நில அளவர் மற்றும் உதவி வரைவாளர்

ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு (நேர்முகத்தேர்வு) தொகுதி-I மற்றும் தொகுதி II
பாலின விகிதாச்சார தெரிவு

